


# தினப்புயல்

PTN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -342

## இலங்கையை 'சிங்களே' என பெயர் மாற்றக்கோரும் பௌத்த துறவிகளால் ஆபத்து

## ஆட்சி மாற்றங்கள் வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை ஒருபோதும் பெற்றுத்தரப்போவதில்லை

## இலங்கையின் பொருளாதாரமும், கட்டுப்படுத்தப்பட்ட இறக்குமதிகளும்



# ஆட்சி மாற்றங்கள் வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை ஒருபோதும் பெற்றுத்தரப்போவதில்லை

இலங்கையை மாறி மாறி ஆட்சிசெய்த ஆட்சியாளர்கள் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையை கட்டவீழ்த்து விட்டிருக்கின்றார்களே தவிர. தமிழ் மக்களுக்கானத் தீர்வினைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கம் அவர்களுக்கு இருக்கவில்லை. சமாதானப் பேச்சுக்கள் என்று மாறி மாறி வருகின்ற அரசுகள் ஒவ்வொன்றும் தனது அரசியல் நகர்வினை நகர்த்திக் கொள்வதற்காககவும் அடுத்த ஐந்து ஆண்டுகள் ஆட்சிபீடம் ஏறுவதற்காகவும் பேச்சுவார்த்தைகள். சமாதான உடன்படிக்கைகள். வடகிழக்கு இணைப்பு பயங்கரவாதத் தடைச்சட்டம். நீதி. நிர்வாகம். திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் போன்றவை தொடர்பில் தொடர்ச்சியாகப் பேச்சுக்களே இடம் பெற்று வந்திருக்கின்றன.

இந்த நிலையில் யுத்தம் நிறைவடைந்து 11 ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையிலும் ஒரு சர்வதேசத்தின் மூலம் தமிழ் மக்களுக்கானத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் தமிழ்த் தரப்பு ஐநாவிடமும் அதன் உறுப்பு நாடுகளிடமும் கோரிக்கைகளை முன்வைத்தும் போர்க்குற்றம் இடம்பெற்றதற்கான ஆதாரங்களை ஆவணங்களாகச் சமர்ப்பித்தும் இதுவரை தீர்வுகளின்றி தமிழ் மக்களுக்கான நீதி கோரிய போராட்டம் தொடர்ந்தும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான ஆர்ப்பாட்டப்பேரணி இலங்கையரசிற்கும் சர்வதேசத்திற்கும் ஒரு செய்தியைச் சொல்லி நிற்கிறது. ஆனாலும் இந்த நாட்டில் ஒரு சர்வாதிகார ஆட்சியையே அரசாங்கம் ஏற்படுத்த முயற்சி செய்கிறது. இராணுவப் புரட்சியின் மூலம் இலங்கையில் ஆட்சியைக் கைப்பற்றுவது என்பது பாரிய சிக்கலான விடயமாக இருந்தாலும் மியன்மாரில் சீன நாட்டின் உதவியுடன் இராணுவ ஆட்சியைக் கொண்டுவந்ததுபோல்இலங்கையிலும் கொண்டுவர தற்போதைய அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளலாம் என எதிர்வு கூறப்படுகிறது.

இலங்கையில் இந்தியாவை அடுத்து நீண்டகால சீனப் பொருளாதாரம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனால் இந்திய கம்பனிகளுடைய வர்த்தக உடன்படிக்கைகள் இரத்துச்செய்யப்பட்டு சீன நிறுவனத்துடனான உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் ஒரு கட்டமாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பல்வேறு பொருட்களுக்கும் இலங்கை அரசாங்கம் தற்போது தடைவிதித்துள்ளது. குறிப்பாக வாகனங்களும் இதில் உள்ளடக்கப்படுகின்றது. இதனால் இந்தியக் கம்பனிகளுக்கு பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இன்றைய காலச் சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கானத் தீர்வுகளைக் கோரி தமிழ்க் கட்சிகளும். மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் குரல் கொடுத்து வருகின்ற இந்தக் காலக்கட்டத்தில் அவர்களின் குரல்வளைகளை நசுக்குகின்ற ஒரு செயற்பாடாகவே தற்போதைய அரசாங்கம் தனது நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது.

சர்வதேச நாடுகளைப் பொறுத்தவரையில் இலங்கை விவகாரத்தில் தலையிடுவதைப் போன்று தமது பூகோள அரசியல் செயற்பாடுகளை இந்நாட்டில் முடுக்கிவிட்டுள்ளனர். எந்த அரசாங்கம் ஆட்சிபீடம் ஏறினாலும் அந்த அரசுடன் ஒப்பந்தங்களைச் செய்துகொண்டு தமிழ் மக்களின் பிரச்சினையை தீவிரவாதப் பிரச்சினையாகவே அவர்கள் பார்க்கின்றனர்.

உலக நாடுகளின் உதவியுடன் விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த இலங்கையரசு. அந்த பெருமிதத்தோடு சர்வதேச ரீதியிலான இரகசிய உடன்படிக்கைகளைச் செய்துகொண்டு உள்ளூர்ப் பிரச்சினைகளை நாங்களே தீர்த்துக்கொள்வோம் என்கிற ரீதியில் இன்றுவரை செயற்பட்டு வருகின்றனர். அதுமட்டுமன்றி சர்வதேச ரீதியில் தமிழினத்திற்காக குரல் கொடுக்கின்றவர்களின் குரல்வளைகள் நசுக்கப்பட்டு அவர்களும் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டோர் பட்டியலில் இணைத்துக்கொள்ளப்பட்டமைதான் வரலாறு.

தமிழ் மக்களுக்கானத் தீர்வினை சர்வதேசத்திடம் நம்பியிருந்த நிலையில். முள்ளிவாய்க்காலில் ஒரு இலட்சத்து நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொலை செய்யப்படும் வரையிலும் இந்த சர்வதேசம் கண்மூடி மௌனிகளாக இருந்துவிட்டு. இன்று தமிழினத்திற்காக முதலைக்கண்ணீர் வடிக்கின்றனர். எது எவ்வாறாயினும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையரசினை நிறுத்த முடியுமா இல்லையா என்கிற கேள்விக்கு அதற்குரிய சான்றுகள் உரிய முறையில் இன்னமும் வழங்கப்படவில்லை.

ஜெனீவாக் கூட்டத்தொடர் நடந்துமுடிந்துள்ள நிலையில். அடுத்த கூட்டத்தொடரிலாவது தமிழ் மக்களுக்கானத் தீர்வு எட்டப்படும் என்ற நப்பாசையுடன் தமிழ்த் தரப்பு இங்கு பயணிக்கிறது. ஆனால் ஆவணங்கள் உரிய இடத்திற்கு சென்றடைவதற்கு மாறாக குறித்த சான்றுகள் பல்வேறு மனித உரிமை அமைப்புக்களிடமும் விற்கப்படுகின்றன.

குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி. ரெலோ சிவாஜிலிங்கம் உட்பட இலங்கையில் திரைமறைவில் இயங்கிவருகின்ற மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் ஜெனீவாவில் ஆவணங்களை வழங்கியுள்ள போதிலும் அது சட்டவரையறைக்குள் ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்று அல்ல என்றும் அதற்கான ஆவணங்கள் போதியதாக இல்லை என்றும். இனப்படுகொலையா போர்க்குற்றமா என்கின்ற சந்தேகங்களை வலுப்படுத்தியுமே ஜெனீவாக் கூட்டத் தொடர்கள் முடிவுக்கு வருகின்றன.

ஒருசில நாடுகள் இலங்கைக்கு ஆதரவினை வழங்கினாலும் கால அவகாசத்தை கிடைக்கும்போது இலங்கையரசு தன்னை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்றது. இதனால் எந்த விடயத்தினையும் நடைமுறைப்படுத்த இயலாத நிலை உருவாகியுள்ளது. இந்தியா இம்முறை ஜெனீவா



கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு நடுநிலை வகித்தமையானது தனது சுயலாபத்தையே வெளிப்படுத்தி நிற்கிறது.

பொருளாதார ரீதியாக இலங்கையை முடக்குவதாகவிருந்தால் அதற்கு சர்வதேச ரீதியாக அங்கீகாரம் வேண்டும். அதற்கான வாய்ப்புக்கள் இல்லை. தற்போதைய சூழ்நிலையில் இலங்கைக்கு நேசக்கரம் நீட்டவே அதிகாரமிக்க உலக நாடுகள் முன்னிற்கின்றன.

தமிழ் கட்சிகளிடையே இந்த அரசாங்கம் முறுகல் நிலையினைத் தோற்றுவித்து. சர்வதேச ரீதியில் தமிழ் அரசியல் தலைவர்களை வைத்து தமக்கான சாதகத்தன்மையினை ஏற்படுத்திக் கொள்கின்ற நடவடிக்கையினையே அரசாங்கம் மேற்கொள்கிறது. இவ்வாறான கட்டத்தில் தமிழ்த் தரப்புக்கள் எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பது பற்றியும் சிந்திக்கவேண்டும். சிங்களத் தரப்பு ஆட்சி மாற்றம் ஒன்றினை மேற்கொள்வதற்கு தனது கூட்டுக்கட்சிகளை எவ்வாறு தயார்ப்படுத்துகின்றதோ. பௌத்த தேரர்கள் எவ்வாறு ஆட்சிபீடம் ஏறுபவருக்கு ஆதரவு வழங்குகிறார்களோ அந்த நடைமுறையினை மக்களும் கடைப்பிடிக்கிறார்கள். தேர்தல் காலத்தில் குறிப்பாக இனவாதம் மதவாதம் சேதிய வாதம் இவை மூன்றும் இன மத மொழிகளைக் கடந்து மக்கள் மத்தியில் விதைக்கப்படுகின்றது. இலங்கையில் வாழ்கின்ற மக்கள் ஒரு இனம் என்கிற கோட்பாட்டையோ அல்லது ஒரு நாட்டுக்குள் இருப்பவர்கள் என்கிற கோட்பாட்டைக் கொண்டிருக்காது மக்களைக் கூறுபோட்டே வேட்பாளர்கள் மக்கள் மத்தியில் வலம் வருகிறார்கள்.

தேர்தலில் இனவாதமும் மதவாதமும் இறுதி வெற்றியினைத் தீர்மானிக்கின்றன. இதில் பிரதேசவாதங்கள் பார்க்கப்படுவது இல்லை. வடகிழக்கு இணைந்த ஒரு தமிழர் தாயகத்தை உருவாக்குவதன் ஊடாகவே தமிழ் மக்களுக்ாகன தீர்வினை அடையமுடியும். அதற்கான ஒத்துழைப்புக்களை தமிழ் பேசும் அரசியல் தலைமைகள் கட்சி வேறுபாடின்றி தமிழ் மக்களுடைய அரசியல் ரீதியான போராட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களாக செயற்படவேண்டும். தொடர்ந்தும் அரசிற்கு சாதகமான அரசியலை இவர்கள் மேற்கொள்வதன் ஊடாக கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இவர்கள் சாதித்தது என்ன?

ரெலோ. புளொட். ஈபிஆர்எல்எப். ஈபிடிபி. கருணா குழு மற்றும் ஏனைய தமிழ்க் கட்சிகள் ஒவ்வொன்றும் தமிழினத்தின் விடுதலைக்காகப் போராடப்புறப்பட்டனர் என்பது உண்மையாக இருந்தால் அரசினுடைய ஏமாற்று அரசியலுக்கு அடிபணியாது செயற்படுகின்ற ஒரு நிலைப்பாட்டை தொடர்ந்தும் பேணவேண்டும். தமிழ் மக்களுக்கானத் தீர்வுத்திட்டம் சாத்தியமாகின்ற பட்சத்தில் உங்களது ஆசன பங்கீட்டு விடயங்கள் தொடர்பில் மோதிக்கொள்ள முடியும். அதனைவிடுத்து அரசின் அற்ப சொற்ப சலுகைகளுக்காக ஒரு இனத்தைக் காட்டிக்கொடுக்கின்ற செயற்பாடுகளில் தமிழினத்தின் அரசியல்வாதிகள் இறங்குவது என்பது சொந்த செலவில் சூனியம் வைப்பதற்குச் சமனானது.

இலங்கை அரசானது ஒருபோதும் எமக்கான தீர்வுத்திட்டத்தை கையில் கொடுக்கப்போவதில்லை. முப்பது வருட காலப் போராட்டமானது எமக்கான விடியலை நோக்கி எம்மை பயணப்பட உறுதுணையாகவிருந்தது. அந்த சிகரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காகவே தமிழீழ விடுதலைப்புலிகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு பாராளுமன்றத்திற்கும் உறுப்பினர்களை அனுப்பிவைத்தனர். அப்போது 22 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த ததேகூட்டமைப்பு இன்று 10 பாராளுமன்ற உறுப்பினர்களையே பெறமுடிந்துள்ளது. ஆக 12 ஆசனங்களை இன்று இழந்துள்ளமையானது தமிழ்க் கட்சிகளது ஒற்றுமையின் பலவீனத்தையே காட்டுகின்றது. இதற்காக இலங்கையரசு பல்வேறு வழிகளிலும் தம்முடன் இணைந்து செயற்படுகிற தமிழ் ஒட்டுக்குழுக்களுக்கு வரப்பிரசாதங்களை வழங்கி எமது இனத்தை மழுங்கடிக்கின்ற வேலைகளைத் தொடர்ந்தும் செய்து வருகின்றது. இப்படிப்பட்ட துரோகிகளை இனங்கண்டு தமிழ் மண்ணையும் தாயகத்தையும் நேசிக்கின்ற மக்கள் இவர்களுக்கானத் தீர்ப்பினை விரைவில் வழங்கவேண்டும். தொடர்ந்தும் தமிழினம் சோரம்போகின்ற அரசியலை மேற்கொள்வதன் ஊடாக எதனையும் சாதிக்க முடியாது. தமிழ் மக்களாகிய நாம் எமக்கான தீர்வினை அஹிம்சை வழியில் போராடி வெல்லவேண்டும்.

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## தொடர்ந்தும் இழுபறியில் மாகாண சபைத் தேர்தல்

இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்று அடிக்கடிக் கூறிக்கொள்ளும் சிங்களத் தரப்பு. மாகாண சபைகளின் காலம் நிறைவடைந்தும் இன்னமும் தேர்தலை நடத்தாது இழுத்தடிப்புச் செய்வதை கடந்த நல்லாட்சி கச்சிதமாகச் செய்து முடித்து தனது ஆட்சியை முடித்துக்கொண்டதுடன் தொடர்ந்து அரியணையில் அமர்ந்த தற்போதைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அணியினரும் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தாது எல்லை நிர்ணயம். பழைய தேர்தல் முறைமை. புதிய தேர்தல் முறைமை என்கிற குழப்பங்களுடன் காலத்தை வீணாக இழுத்தடிப்பு செய்து வருகின்றனர்.

ஒரு ஜனநாயக நாடு எனில் தேர்தல்கள் உரிய காலத்தில் உரிய முறையில் நடத்தப்படவேண்டும். உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாகாண சபைகள் என்பன மக்களது வாழ்வாதாரம் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளில் பாரிய பங்கினை வகிப்பவை. தற்போது மாகாண சபைகள் அனைத்தினதும் செயற்பாடுகள் முடக்கப்பட்டு ஆளுநர்களின் வசம் மாகாண சபைகள் உள்ளன. மாகாண சபைக் கட்டடங்கள் பல வருடங்களாக இயங்காமல் தூசுபடிந்துள்ளன.

மாகாண சபைகளுக்கான முழுமையான அதிகாரங்கள் இதுவரை மத்திய அரசினால் வழங்கப்படாத நிலையிலும் தமக்கென வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களைப் பயன்படுத்தி மாகாண சபைகள் செயற்பட்டு வந்தன. அரசு இன்று உள்ளூராட்சி சபைகளிலும் நேரடியாகத் தலையிட்டு குழப்பங்களை ஏற்படுத்தி வருகிறது. தமிழர் தாயகமான வடகிழக்கில் இந்த மாகாண சபைகளின் செயற்பாடுகள் அவசியமானவை. ஏனெனில் மத்திய அரசு வடகிழக்கில் போதுமான அபிவிருத்தி வேலைகளைச் செய்யவில்லை. தொடர்ந்தும் தமிழர் தாயகத்தை அபகரிக்கும் நோக்குடன் திட்டமிட்டு சிங்களக் கிராமங்களை உருவாக்கி பௌத்த விகாரைகளை அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. எனவே இந்த வட மாகாண சபை அரசின் எதேச்சாதிகாரப் போக்கிற்கு எதிராக தமிழ் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு கணிசமானளவு பங்காற்றி வந்தது. எனினும் தற்போது வடமாகாண சபையின் நடவடிக்கைகள் யாவும் அரச பிரதிநிதியான ஆளுநரின் கையில் சிக்கியுள்ளது. இது தமிழ் மக்களுக்கு துரதிஷ்டமே.

எனினும் தெற்கில் தற்போது மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கோரிக்கைகள் வலுப்பெற்று வருவதையும். அரச தரப்பினர் தற்போது இருக்கும் சூழலில் மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் தோல்வியடைவர் என்கிற ரீதியிலான பிரச்சாரமும் முன்னெடுக்கப்படுவதை நாம் காண்கிறோம். எது எவ்வாறாயினும் ஜனநாயகப் பண்புகள் மீறப்படலாகாது. மாகாண சபை என்பது தமிழ் மக்களுக்கு இன்றைய சூழலில் மிக அவசியம். கொரோனாப் பரவல் இலங்கையில் அதிகரித்துவரும் நிலையில். உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மாகாண சபைகளுக்கான தேர்தலை மேலும் தாமதிக்காது அரசு நடத்தவேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

145

கைப்பற்றப்பட்ட பிரதேசத்தைத் தொடர்ச்சியாக அல்லது ஓர் இடைக்காலம் வரை கெரில்லாக்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால் அல்லது நாட்டின் குறித்த ஒரு பாகத்தைத் தமது ஆளுகையின் கீழ் வைத்திருப்பதாலேயே கெரில்லாப் போராட்டம் வெற்றியைப் பெற்றுக் கொள்ளலாம்.

கெரில்லாக்களுக்குப் பாரதூரமான இழப்பை ஏற்படுத்தக்கூடிய திறன்வாய்ந்த கணிசமானளவு படைகளை எதிரி ஒருமுகப்படுத்தும்வரை, விடுவிக்கப்பட்ட அல்லது கெரில்லாக்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்ற பிரதேசத்தை அவசியம் பிடித்து வைத்திருக்கவேண்டும். நினைவில் கொள்ளவேண்டியது யாதெனில், இப் பிரதேசத்தைத் திடமாகப்பிடித்திருக்க வேண்டுமென்பது ஒரு பொழுதும் அவசியமில்லை. ஏனெனில், கெரில்லாப் போர் விதிமுறைகளுக்கமைய கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசம் தொடர்ச்சியாகக் கட்டுப்பாட்டிலிருக்கும் என்பதில்லை.

விடுவிக்கப்பட்ட பிரதேசத்திற்கான இடைக்காலப் பாதுகாப்பு கெரில்லாக்களின் தனியான குழுக்களால் ஒரேநேரத்தில் இப்பிரதேசத்தின் வெவ் வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றது. இக்குழுக்களின் எண்ணிக்கை வெவ்வேறானதாகவும் சூழ்நிலை, தம்மிடத்திலுள்ள ஆளணி, படைக்கலன்கள் போன்றவற்றைப் பொறுத்த மாறுபட்டளவிலும் இருக்கும். விடுவிக்கப்பட்ட பிரதேசத்திற்கான பாதுகாப்பிற்குப் பல எண்ணிக்கையில் குழுக்கள் செயற்படுவது, எதிரி தனது படை களைப் பரவலாக வைத்திருக்க நிர்ப்பந்திக்கின்றது. இதுவே கெரில்லாப் போரில் மிக முக்கியமானதாகும். இவ்வாறான சூழ்நிலையில், எதிரி தனது படைகளை அங்கொன்றும் இங்கொன்றுமாக வைத்திருக்கவேண்டி ஏற்படுகின்றதுடன், சிறிய படைப் பிரிவுகளாகவும் செயற்பட வேண்டியுள்ளது. பெரிய எண்ணிக்கையிலான முகாம்களை உருவாக்கவேண்டியுமுள்ளது.

விடுவிக்கப்பட்ட பிரதேசத்தின் இடைக்காலப் பாதுகாப்பை நிறைவேற்றும் பணியைச் செய்கின்ற தனியான கெரில்லாக் குழுக்கள் எதிரியுடன் நேரடிச் சமரில் இறங்கமாட்டார்கள். அத்துடன், எதிரிக்கெதிரான நட வடிக்கைகளையும் மேற்கொள்ள மாட்டார்கள். எதிரி முன்னேறி வருகின்றபோது, சமரில் இறங்காமல் தமது படைகளையும் படைக்கலன்களையும் பாதுகாத்தவாறு கெரில்லாக்கள் பின்வாங்குகின்றார்கள்.

கெரில்லாக்களின் செயற்பாட்டிற்கு ஆதரவளிக்கின்ற பிரதேச மக்கள் தமது சுயமான நடவடிக்கைகளைத் தவிர்க்கவேண்டும். ஏனெனில், இது அவர்களை அழிவுக்கு மாத்திரமே இட்டுச்செல்லும்.



குறிப்பாகக் குளிர்காலப் பகுதிகளில் செயற்படுவது கெரில்லாக்களுக்கு மிகச் சிரமமாகும். ஆகவேதான், முற்கூட்டியே குளிர்காலத்திற்கான தயார்ப்படுத்தலை மேற்கொள்ள வேண்டும். தொழினுட்பப் பொருட்கள், ஆடைகள், சப்பாத்துக்கள், கெரில்லா அமைப்பிலுள்ள ஒவ்வொரு வருக்கும் விநியோகிப்பதற்கான அளவு உணவுப் பொருட்கள் போன்றவற்றின் சேமிப்பை அவசியம் ஏற்படுத்தியிருக்கவேண்டும்.

கெரில்லாக் குழுக்களுக்கெதிரான செயற்பாட்டிற்காகக் கணி சமானளவு படைகளை ஒருமுகப்படுத்தும்போது, எதிர் (தொடர்ச்சியான இருப்புக்காக வெனத் தெரிவு செய்த இடத்தை நீக்கிவிட்டு) தனது சிறிய படைப் பிரிவுகளையும் தனியான காவல் நிலையங்களையும் பயன்படுத்துவான். இந்தச் சூழ்நிலைகளைக் கெரில்லாக்கள் தொடர்பாளர்களுடனான சந் திப்பு மற்றும் வேலை, வேவு மேற்கொள்ளல், நடவடிக்கைப் பிரதேசத்திலிருக்கின்ற எதிரியின் வேவு மற்றும் தகவல் வலையமைப்பை அழித்தல் போன்றவற்றிற்காகப் பயன்படுத்த வேண்டும். இதன்போது, எதிரியின் சிறிய படைப்பிரிவுகளாலும் காவல் நிலைகளாலும் முன்னரேயே மூடப்பட்ட பாதைகளே பயன்படுத்தப் படுகின்றன.

### கெரில்லாப் போராட்டத்தில் நிபுணர்களைப் பயன்படுத்தல்

கெரில்லாப் போராட்டத்தில் தனியான கெரில்லாக் குழுக்களின் செயற்பாடுகளில் வெவ்வேறுவிதமான துறைக ளில் சிறப்புத் தேர்ச்சியைக் கொண்ட நிபுணர்கள், அத்துடன் தொடர்பு, வீதிப்போக்குவரத்து, மின்சார நிலையம், மின்வலையமைப்பு ஆகியவற்றின் பணியாளர்கள் போன்றோர்களை வினைத்திறன்மிக்க வகையில் பயன்படுத்தவேண்டும்.

கண்ணி வைத்தல், கண்ணித் தகர்ப்புப் போன்றவற்றிற்கான தயார்ப்படுத்தல் பயிற்சியைப் பெற்றுள்ள இராணுவப் பணியாளர்களைப் பயன்படுத்துவது மிக முக்கியமாகும். பல்வேறு வகையான இலக்குகளுக்கெதிராக நாசகார வேலையைத் தயார்ப்படுத்துவதற்கும் மேற்கொள்வதற்கும் இவர்கள் தேவையானவர்கள். கிளர்ச்சிக்காரக் குழுக்களிடையிலான தொடர்பாளர் களாகவும் தகர்ப்பு வேலையை மேற்கொள்ளும்போது, அதில் பங்கெடுத்துக் கொள்வதற்காகவும் வழக்கமான இராணுவப் பணியாளர்களைப் பயன்படுத்தலாம்.

பத்திரிகைகளதும் சஞ்சிகை களதும் நிருபர்கள், பதிப்பகத்தின் தலைவர்கள் ஆகியோர் பிரதான வேலையாகத் துண்டுப்பிரசுரங்கள், அறிக்கைகள், பத்திரிகைகள் ஏனைய பிரச்சாரப் பரப்புரை நடவடிக்கைகளுக்கான தயார்ப் படுத்தல்களை மேற்கொள்கின்றார்கள்.

### பொருட் தளபாட விநியோகமும் உணவும்

வாழ்வாதாரப் பொருட்களும் போராட்டத்திற்கான பொருட் தளபாடப் பொருட்களும் ஒவ்வொரு கெரில்லாக் குழுக்களுக்குமெனத் தயார்ப்படுத்தப்பட்டு (வழங்கப்பட்டு) இருக்கவேண்டும். இவை சமரின்போது எதிரியிடமிருந்து கைப்பற்றப்படுகின்றன. கொள்வனவு செய்வது சாத்தியமென்றால் பணம் கொடுத்தும் வாங்கப் படுகின்றன.

கெரில்லாக் குழுவிலுள்ள ஒவ்வொரு வீரனுக்கும் அவசிய மான பொருட்களனைத்தும் விநியோகிக் கப்பட்டிருக்கவேண்டும். இராணுவத் தளபாடம், சப்பாத்து, ஆயுதம், உப கரணம், உணவுப்பொருட்கள் போன்றனவாகும். இதனைக் கெரில்லாக்குழுவின் கட்டளையாளன் (தலை வன்) எப்பொழுதும் நினைவிற் கொள்ளவேண்டும்.

மலைப்பகுதிகளில் செயற்படுகின்ற கெரில்லாக்களுக்கு வெதுவெதுப்பான ஆடை, போர்வை போன்றன வழங்குவதில் பிரதான கவனம் செலுத்தப்பட வேண்டும். இவை யாவும் முன்னரேயே தயார்ப்படுத்தப்பட வேண்டும்.

### இவ்வாறான பொருட் தளபாடங்களைப் பெற்றுக்கொள்ளும் வழிகள்

எதிரியிடமும் அவனது தரப்பினரிடமும் பெற்றுக்கொள்ளல் (கைப்பற்றல்).

நகர்ப்புற மக்கள் (வியாபாரிகள், வர்த்தகர்கள், பணியாளர்கள் போன்றோர்) மத்தியிலுள்ள அமைப்பிற்கு (தீவிரப்போக்கில்) உதவி யளிக்கின்றவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளல். வியாபாரிகளிடம் கொள்வனவு செய்வதன் மூலம் (சாத்தியத்தைப் பொறுத்து) சமரின்போது ஆயுதங்களையும் வெடிபொருட்களையும் கைப்பற்றல், எதிரியின் களஞ்சியங்கள் மீது தாக்குதல் தொடுத்தல் அல்லது இப்பொருட்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ள பல்வேறு இடங்களிலிருந்து களவாடுதல் போன்றனவாகும்.

**தொடர்வான்...**

# இலங்கையை 'சிங்கலே' என பெயர் மாற்றக்கோரும் பௌத்த துறவிகளால் ஆபத்து



தற்போது இலங்கையின் அரசியல் சூழ்நிலையைப் பார்க்கின்றபோது இலங்கையில் வாழும் பௌத்த துறவிகளில் ஒரு சிலர் தீவிரவாதப் போக்கில் செயற்பட்டு வருவதைக்காணலாம். அரசிடம்இந்த நாட்டின் பெயரை மாற்றுமாறு இன்று கோரிக்கையும் விடுத்துள்ளமையானது இந் நாட்டில் வாழும் சிறுபான்மை மக்களாகிய தமிழ் - முஸ்லீம் மக்களிடையே ஒரு அச்ச உணர்வையும் இனங்களுக்கிடையிலான முறுகல் நிலையினையும் ஏற்படுத்தியிருக்கிறது.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவை ஹிட்லர் என்ற நபரைப் போன்றவர் என்ற கோணத்தில் கருத்துக்களைப் பரப்பி விடுபவர்களாகவும் மாறியிருக்கிறார்கள். தெற்கில் சிங்கள மக்களிடையேயும் குழப்பங்களை ஏற்படுத்தும் வகையில் இவ்வாறான சில பௌத்த துறவிகள் ஈடுபட்டுள்ளமையானது நாட்டிற்கு குந்தகத்தைத் தான் ஏற்படுத்தப்போகிறது என்பது உறுதி.

தமிழ் மக்களின் கடந்த 30 வருடத்திற்கு மேலான போராட்டம் என்பது ஒரு இனத்தின் விடுதலைக்கானது. அஹிம்சை - ஆயுதம் என போராட்டங்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் மாற்றம் பெற்றது. அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக தமிழ் இளைஞர் யுவதிகள் கிளர்ந்தெழுந்தனர் என்பது உண்மை. தற்போது ஆயுதப் போராட்டம் மழுங்கடிக்கப்பட்டாலும் தமிழ் மக்களுக்கானத் தீர்வுகளை வழங்க மாறி மாறி இலங்கையை ஆட்சி செய்த ஆட்சியாளர்களும்தற்போதைய ஆட்சியாளர் கோட்டபாய ராஜபக்ஷ அவர்களும் வழங்கத் தயாராகவில்லை என்பது அவர்களின் செயற்பாடுகளில் இருந்தே அறியக் கிடக்கின்றது.

தமிழ் மக்களுக்கானத் தீர்வுகளை வழங்க அரசு முனைப்புக் காட்டாது சிங்களே என்கிறசொல்லைப்பயன்படுத்தி இலங்கைத் தீவுக்குள் மீண்டும் இனங்களுக்கிடையில் பிரச்சினைகளை ஏற்படுத்த இந்த பௌத்ததுறவிகளைக்கொண்டு திட்டம் தீட்டியுள்ளனரா என்கிற கேள்விகள் எழாமலில்லை. மறுபக்கத்தில் தமிழே என்கிற பெயரும் உருவாக்கம் பெற்றாலும் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஏனெனில் இதற்கான அடித்தளத்தை போடுகிறவர்களே இந்த பௌத்த துறவிகள் தான்.

தாம் பூண்ட துறவுக்கான நோக்கமான போதனைகளை, நல்லொழுக்கத்தை, அறக்கருத்துக்களை மக்கள் மத்தியில் வளர்ப்பதை விட்டுவிட்டு இன்று இவர்கள் அரசியல் செய்யக் களமிறங்கியமைதான் ஆபத்தானதாக மாற்றம் பெற்றுள்ளது.

சர்வதேச சக்திகளின் ஆதிக்கம் இலங்கையில் கால்பதிக்கத் தொடங்கியுள்ளதா என்கிற சந்தேகங்களும் வலுப்பெறுகிறது. இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பின்னணியில் இருப்பது யார் என்கிற கேள்விக்கு இன்னமும் விடை தெரியவில்லை.

கடந்த காலப் போராட்டங்களில் முஸ்லீம்களுக்குஎதிராகதமிழ்த் தரப்பினை மோதவிட்ட அரச தரப்பினர் இன்று அவர்களை ஓரங்கட்டியுள்ளனர். அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் களமிறங்கியுள்ளனர். தமிழ்த் தரப்பினைப் பொறுத்தவரைநாம்எமதுகொள்கைகளில் உறுதியாக இருக்க வேண்டும். சிங்களே என்கிற பெயரை இந்நாட்டில் பயன்படுத்த தடைவிதிக்க வேண்டும். இன்று ஒரு சில பௌத்த துறவிகளின் செயற்பாடுகள் மீண்டும் இனங்களுக்கிடையிலான முறுகலையே உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் ஒரு குடையின் கீழ் இணைந்து செயற்பட்டால் மாத்திரமே எமக்கு வெற்றி கிட்டும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இனவாதத்தை முன்வைத்தே வெற்றி பெற்றிருக்கின்றார்கள். இந் நாட்டை முழுமையாக பௌத்த நாடாக மாற்றுவதே அவர்களின் திட்டமாக இருக்கிறது. சிறுபான்மைச் சமூகங்களை அழித்தொழிக்கும் நோக்கிலேயே அரசு செயற்படுகிறது.



தமிழ் அரசியல்வாதிகள் இன்று என்ன திட்டத்தை வைத்திருக்கிறார்கள் என்பதை வெளிப்படையாகக் கூறவேண்டும். இவர்கள் இன்று எந்தக் கொள்கைகளின் அடிப்படையில் செயற்படுகிறார்கள் என்பதை தமிழ் மக்கள் அவதானிக்க வேண்டும்.

அரச கைக்கூலிகளாக செயற்படுபவர்கள் தொடர்பில் நாம் அவதானமாக இருக்க வேண்டும். எமக்கென விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட அமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. ஆகவே நாம் எதிர்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பலப்படுத்தவேண்டும்.

**நெற்றிப்பொறியன்**

# பெண்களும் உளவியல் முரண்பாடுகளும்



### அறிமுகம்

பெண் என்னும் பெயர் விலங்குகளில் அண்டத்தையும் தாவரங்களில் சூலங்களையும் கொண்டிருக்கும் இனத்தை குறிக்கும். மனிதரில் பெண்கள் ஒரு குலம். உளவியல் என்ற பதம் மனித மனம் செயற்படுவதைக் குறித்தும் மனத்தின் வெளிப்பாடுகளுக்கான குணம், நடத்தை குறித்து ஆராயும் அறிவியல் துறை ஆகும். முரண்பாடு என்பது ஒன்று அல்லது ஒருவர், குறிப்பிடப்படும் ஒன்றின் அல்லது ஒருவரின் நிலைக்கு எதிராக இருத்தல் மாறுபடுதல் ஆகும். அவ்வகையில் இக் கட்டுரையானது வடக்கு மாகாணத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் மன அழுத்தங்களையும் உளவி யல் முரண்பாடுகளையும், பிரச்சினைகளும் சிரமங்களும் மிகுந்த நிலையில் ஏற்படும் உளவியல் நெருக்கடிகளையும் ஆராயும்.

### தொடருரை

இலங்கை சமூகத்தில் ஆண்களைவிட பெண்களே சனத்தொகையில் கூடிய அளவு உள்ளனர். ஆண்களை விட, பெண்கள் வருமான உழைப்பாளர் மற்றும்குடும்பப்பராமரிப்பாளர்என்ற முறையில் இவர்கள் இரட்டைச் சுமையைக் கொண்டுள்ளனர். பல குடும்பங்களில் பெண்களே பிரதான வருமான ஈட்டாளர்களாக காணப்படுவதோடு, அதற்குமேலாக சமைத்தல், கணவனைப் பராமரித்தல், விறகு சேகரித்தல், எவ்வித வேலையும் செய்யாத கணவனை பாதுகாத்தல், நீர் சேகரித்தல், வீட்டுப்பராமரிப்பு, குழந்தைகளைப் பராமரித்தல், வயது சென்றோர்களைப் பராமரித்தல், துணி துவைத்தல், சகோதரர்களைப் பராமரித்தல் முதலிய செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். இதன் காரணமாக அவர்கள் தொழில் நாட்களில் எவ்வித ஓய்வு நேரத்தையும் அநுபவிப்பதில்லை. அதிகாலை முதல் நள்ளிரவு வரை அதிகமான வேலைப்பளுவிற்குட்படுகின்றனர். இதனால், நித்திரையின்மையால் இவர்களது உடல்நலனும் பாதிப்படைகின்றது. வேலைத் தளங்களிலும் பாதைகளிலும் துன்பங்களுக்கு உட்படல் என இன்னோரன்ன துன்பங்களைப் பல்வேறு விடயங்களிலும் நாளாந்தம் அநுபவிக்கின்றனர்.

குடும்பத்தில் ஆண்களே தொடர்ந்தும் தீர்மானங்களை மேற்கொள்பவர்களாகக் காணப்படுகின்றனர். பிள்ளைகளின் கல்வி, தொழில், வீட்டதிகாரம், வீட்டுத்துறை கொள்வனவு, குடும்பநிலை உறவு பேணல், வீட்டுப் பொருளாதாரத்தைப் பேணல் முதலிய விடயங்களை ஆண்களே நடைமுறைப்படுத்துகின்றனர். சமுதாயச் சடங்குகள், கலாசார நிகழ்வுகள், தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் அரசியல் முதலிய துறைகளில் பெண்களின் ஈடுபாடு மிக மிக குறைவாகவே காணப்படுகின்றது.

இலங்கையில் இவ்வாறாக பொதுவாக பெண்கள் எதிர் கொள்ளும் உடல் - உள முரண்பாடுகள் காணப்பட்டாலும் வடக்கு மாகாணத்தில் பெண்கள் எதிர் கொள்ளும் உள நெருக்கடிகள் அதிகமே.உள்நாட்டுயுத்தத்தினால், இலங்கை முழுவதும் பாரிய பின்னடைவைக் கண்டதுடன், உயிர்ச் சேதமும் மற்றும் பொருளாதார சேதமும் ஏற்பட்டன. யுத்தம் இறுதியாக நடந்து முடிந்த வடக்கு மாகாணத்தில் பெண்கள் உளவியல் ரீதியாக பாரிய முரண்பாடுகளை எதிர்கொள்கின்றனர். இவ் மாகாணத்தில் யாழ் மாவட்டத்தில் *36334* பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் *8435* பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் *5961* பேரும் வவுனியா மாவட்டத்தில் *6712* பேரும் மன்னார் மாவட்டத்தில் *5903* பேரும் ஆக மொத்தத் தொகையாக *63345* பெண்களைத் குடும்பத்தலைவர்களாக கொண்ட குடும்பங்கள் உள்ளன.

வடக்கு மாகாணத்தில் இவ்வாறு பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்கள் பொருளாதாரச் சுமையைச் சுமக்க முடியாது அதிக அளவான பெண்கள் நுண்கடன்களைப் பெற்று அதனை மீளச்செலுத்த முடியாது வாழ்க்கையில் பல சவால்களை எதிர்கொண்டு மன அழுத்தத்திற்கு உள்ளாகி, சமூகப் பிறழ்வு - தற்கொலை என்று தவறான பாதைக்குச் செல்கின்றனர். இதனை *2018*ஆம் ஆண்டு இலங்கை வந்திருந்த ஐக்கிய நாடுகளின் விசேட நிபுணர் ஒருவர் கடுமையாக எச்சரித்திருந்தார். கடனை மீள செலுத்த முடியாது தானும் நஞ்சு அருந்தி பச்சை பாலகர்களுக்கு நஞ்சை பருக்கி இறக்கின்றனர். இன்று வடக்கு மாகாணத்தில் பெண்களோடு சேர்ந்து, சிறுவர்களும் பாரிய உள நெருக்கடிகளுக்கு உள்ளாகி எமது இன விருத்தியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளனர். சான்றாக, *2021* ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் தரம் ஒன்றில் புதிதாக இணைந்த மாணவர் தொகை வீழ்ச்சியைக் குறிப்பிடலாம். பத்து பாடசாலைகளில்எவரும்விண்ணப்பிக்கவில்லை. *2020*ஆம் ஆண்டு *16820* மாணவர்களும் *2021*ஆம் ஆண்டு *15703* மாணவர்களும் தரம் ஒன்றில் இணைந்துள்ளமை மாணவர்கள் வீழ்ச்சியைக் காட்டுகின்றது. இதற்கு என்பது வீதத்திற்கும் அதிகமான அரச பணியில் இருக்கும் பெண்கள் பொருளாதாரச் சுமைக்கும் வேலைபளுவிற்கும் உள்ளாகி குழந்தைகளை ஒன்றுக்கு மேல் பெற்றுக்கொள்ள வெறுப்படைகின்றனர்.

வடக்கு மாகாணத்தில் யுத்தம், இயற்கையாக, கணவனால் கைவிடப்பட்டு, கணவனின் ஊனம், கணவன் காணாமல் போயிருத்தல் முதலிய பல்வேறு காரணிகளால், கணவனை இழந்த பெண்களை அரச அதிகாரிகள் முதல் சாதாரண குடிமகன் வரை பாலியல் தொல்லைகளைப் புரிவதால், அவர்கள் உளச் சவால்களுக்கு உள்ளாகின்றனர். விதவைகளைச் சமூக நிகழ்வுகளிலிருந்து தள்ளிவைப்பதால், தங்களால் இனி மேல் ஒன்றும் செய்ய முடியாது என தாழ்வுச்சிக்கல் மனப்பாங்கு ஏற்பட்டு பரிதவிக்கின்றனர்.

கல்வி, பாதுகாப்பு, சுகாதாரம், போக்குவரத்து, வாழ்விடம், போஷனை மட்டம் முதலியவற்றால், பாதிக்கப்பட்டு குறையூட்டத்தை அடைந்து, உழைப்பிற்கேற்ற வேதனம் இல்லாமலும் அதனால், போதியளவு நித்திரை இன்மையால், வாழ்க்கையில் வெறுப்பு, ஞாபக மறதி, காரணமில்லாமல் கோபப்படல் முதலிய உள முரண்பாடுகளுக்கு உள்ளாகின்றனர்.

தமிழ்ப் பெண்கள் அன்று தொடங்கி இன்று வரை சீதனக்கொடுமைக்கு உள்ளாகி வருவதை நாம் கண்கூடாகப் பார்க்கலாம். வடக்கு மாகாணத்தில் கல்வி கற்ற சமூகம் முதல் பாமரர் வரை ஆண் சமூகத்தைச் சேர்ந்த பலரும் சீதனம் கேட்டுப் பெண்களுக்கு உளச் சிக்கல்களைக் கொடுத்து வருகின்றனர். வடக்கு மாகாணத்தில் ஏனைய மாவட்டங்களை விட யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகம் நடைபெறுகின்றமையைக் காணலாம். இன்றைய நிலையில் நீதிமன்றங்கிளில் பல விவாகரத்து வழக்குகள் இதை பறை சாற்றும். திருமணமாகியபின்பும்கணவன்மார் பலர் சீதனம் கேட்டு மனைவிமாரைத் துன்புறுத்தி அவர்களுக்கு உள ரீதியான பாதிப்பை ஏற்படுத்தி, தற்கொலைகளுக்கும் வழி சமைத்துள்ளனர். இவ்வாறான கொடுமைகளைக் கேள்வியுற்ற பெண்கள் பலர் முதிர்கன்னிகளாக உறவினர்களுடனும் தனிமையிலும் தாம்பத்திய வாழ்வை வெறுத்து வாழ்கின்றனர். எமது சனத் தொகை சரிவுக்கு இதுவும் ஒரு காரணம்.

பெண்கள் குடும்பங்களுக்குத் தலைமை தாங்குவதற்கான பிரதான காரணங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:- போர், கணவன் நோய் வாய்ப்பட்டிருத்தல், கணவனின் அங்கவீனம், கணவனைப் பிரிந்திருத்தல், கணவன் தடுப்பில் இருத்தல், கணவன் வெளிநாட்டில் இருத்தல், கணவனின் மரணம், கணவனின் போதைவஸ்து பாவனை, திருமணம் முடிக்காமை, குடும்ப வருமானத்தில் கணவனின் பங்களிப்பு இன்மை, பிள்ளைகளைத் திருப்திப்படுத்துவதற்காகவும் சமூக அந்தஸ்துக்காகவும் போலியாக கணவன் மனைவியாக வாழ்தல். இவ்வாறான பெண்கள் வடக்கு மாகாணத்தில் சமூகத்திலிருந்து அந்நியமயமாதல் வாழ்வை மேற்கொள்வதால், எதிர்கால வாழ்க்கைபற்றியநம்பிக்கையின்மை மன நிலையுடன் வேண்டா வெறுப்பாக வாழ்க்கையைத் தொடர்கின்றனர். இவர்களுக்கு உளவியல் ரீதியான ஆற்றுப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு, சமூக நீரோட்டத்துடன் இணைத்து, மறுமணத்தை வலியுறுத்துவதன் மூலம் அந்நியமயமாதலைக் குறைக்க முடியும்.

'ஆண்பையன் அழக்கூடாது,' 'பெண்பிள்ளை மரமேறக்கூடாது' முதலிய விதிமுறைகள் மக்கள் மத்தியில் பதியவைக்கப்படுகின்றன. இவை அனைவருக்கும் பொதுவான உண்மையாகும். ஆனால், இத்தகைய சிந்தனைகள் காலத்திற்குக் காலம் வேறுபட்டு வந்துள்ளன. ஒரே காலத்தில் வர்க்க, சாதி, இன, மத வேறுபாட்டிற்கு ஏற்ப வெவ்வேறு மதிப்பீடுகள் காலாகாலம் இருந்து வந்துள்ளன. ஆனால், ஆண்மை - பெண்மை என உருவாக்கப்பட்டுள்ள கருத்துக்கள், அவற்றுக்கு வழங்கப்படும் மதிப்பீடுகள் தொடர்ந்து வருகின்றன. அவற்றைத் தீர்மானிக்கும் பல்வேறு கருத்தியலில் மதம், அறிவியல், அரசியல், கல்வி ஆகிய துறைகள் முக்கியமான பங்காற்றுகின்றன என்ற கருத்திற்கு ஏற்ப வடக்கு மாகாணத்தில் வர்க்க ரீதியாகவும் சாதிய ரீதியாகவும் மத ரீதியாகவும் இன ரீதியாகவும் பெண்கள் உளவியல் ரீதியாக பாதிப்புக்கு உள்ளாவதைக் காணலாம். சான்றாக, சாதி விட்டு வேறு சாதியில் காதலித்துத் திருமணம் புரியும் பெண்களைப் பிரித்துவைப்பதையும் அவர்களை உள - உடல் ரீதியாக துன்புறுத்துவதைக் காணலாம்.

நீதித்துறையும் சட்டத்துறையும் இலங்கையில் பெயரளவில் இருப்பதால், பாலியல் பலாத்காரம், வரதட்சினை, விபச்சாரம், கருச்சோதனை, குடும்ப வன்முறை, சிறுமிகளைப் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்குதல், கருக்கலைப்பு, முறையற்ற பாலியல் தொடர்புகள் வடக்கு மாகாணத்தில் மலிந்துள்ளன. சான்றாக, புங்குடிதீவைச் சேர்ந்த பாடசாலை மாணவி வித்தியா ஆடவர்கள் பலரால், சின்னா பின்னமாக்கப்பட்டதைக் குறிப்பிடலாம். இதனால், பெண்கள் வீதியில் சுதந்திரமாக நடமாட அச்சமான பயமான மனநிலையைக் கொண்டுள்ளனர்.

தொடரும்...

**புயல் நேசன்**

# இலங்கையின் பொருளாதாரமும், கட்டுப்படுத்தப்பட்ட இறக்குமதிகளும்



இலங்கை 1948ஆம் ஆண்டு அந்நியரிடமிருந்து சுதந்திரம் பெற்ற ஒரு ஜனநாயக நாடு. அபிவிருத்திப் பாதை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கும் ஒரு அழகிய தீவு. மன்னர்களின் காலத்தில் விவசாயத்தில் தன்னிறைவுப் பெற்று விளங்கிய நாடு. திறந்த பொருளாதாரக் கொள்கையினைக் கொண்ட நாடு. இலங்கையினுடைய பொருளாதாரம் என்பது அவ்வப்போது ஏற்ற இறக்கங்களைக் கொண்டிருக்கும். இதற்குப் பிரதான காரணமாக உள்நாட்டுப்போரையும். ஆட்சியாளர்களையும் கூறலாம்.

இலங்கை பிரதானமாக ஆரம்பத்திலிருந்து தேயிலையினை ஏற்றுமதி செய்கின்ற நாடாக விளங்குகிறது. அத்துடன் வாசனைத் திரவியங்கள். இறப்பர். ஆடைகள். கடலுணவுகள் போன்றவை பிரதானமான ஏற்றுமதிகள். ஆட்சியாளர்களின் அரசியல் குழப்பங்களாலும். நாட்டின் உற்பத்தித் துறையில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாகவும் பெரும் கடன் சுமைக்குள் சிக்குண்டு இன்று தள்ளாடும் ஒரு ஆசிய நாடு. இக்கடன் சுமையினால் அந்நிய நாடுகளின் அதிகாரம் இலங்கை மீது திணிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இலங்கையினது வளங்கள் இன்றும் அந்நிய சக்திகளின் கைகளுக்குள் முடங்கிபோயுள்ளன.

இலங்கை மருந்துகள். வாகனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள். இரசாயனங்கள். கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் தொடர்பாடல் கருவிகள் போன்றவற்றைப் பிரதானமாக இறக்குமதி செய்கின்றதொரு நாடு. ஒரு காலத்தில் விவசாயத்தில் தன்னிறைவுப் பெற்றிருந்த நாடு இன்று அரிசியினையும் இறக்குமதி செய்கின்றது. வெங்காயம். உப்பு. மஞ்சள். பாம் எண்ணெய். பருப்பு வகையறாக்கள் போன்ற பல உணவுப்பொருட்களை இன்றும் இறக்குமதி செய்கின்றது.

இலங்கையினது பொருளாதார வீழ்ச்சிக்கு உற்பத்திகள் குறைந்த நிலையிலும். நாணயத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும். அரசியல் குழப்பங்களினால் ஏற்பட்ட யுத்தங்களும் தான் பிரதான காரணமாகும். இதனை ஈடுசெய்ய முடியாமல் இலங்கையை மாறி மாறி ஆட்சி செய்து வருகின்றவர்கள் இன்றும் தடுமாறும் நிலையில் தான் உள்ளனர். கடன் நெருக்கடிகளால் அந்நிய முதலீட்டாளர்கள் உள்நாட்டில் முதலீடு செய்ய இன்றும் அழைக்கப்படுகின்றார்கள். ஆனால் உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக்க மக்களுக்குத் தேவையான சலுகை களை வழங்க அரசு மறுத்தே வருகின்றது. தேர்தல் நெருங்குகின்றபோது மாத்திரம் வாக்குறுதிகளை வழங்குவது அன்றிலிருந்து இன்றுவரை மாறவேயில்லை.

இலங்கையில் ஏற்பட்ட இன முறுகல் நிலைமைகளும். யுத்தங்களும். மனித உரிமை மீறல்களாலும் இலங்கையின் சுற்றுலாத் துறை பாரிய வீழ்ச்சி கண்டுள்ளது. இதுவும் இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்குப் பிரதானமான காரணியாகும். சர்வதேச சந்தையில் இலங்கையின் உற்பத்திப் பொருட்களுக்கு மாற்றீடாக ஏனைய நாடுகளும் களமிறங்கியமையும் இலங்கையின் பொருட்களுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தியது. நிலையான அபிவிருத்தி இலங்கையில் எப்போதும் கேள்விக்குறியாக மாறியமை இலங்கையின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியே வருகின்றது.

1970களில் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கம். நாட்டில் இறக்குமதிகளைத் தடைசெய்ததோடு. உள்நாட்டு உற்பத்தியையே நாடு முழுமையாக சார்ந்திருக்கும்படி மூடிய பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றியது. இதனால் அந்த கால கட்டத்தில் மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டனர். உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. பிரதான உணவாக மரவள்ளிக் கிழங்கை சாப்பிடும் நிலை மக்களுக்கு உருவானது.

இது இவ்வாறிருக்க. இலங்கை ஜனாதிபதியாக கோட்டபாய ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர். நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தத் துவங்கியுள்ளார். அதன் ஒரு அம்சமாக இறக்குமதிக் கட்டுப்பாடுகளையும். இறக்குமதித் தடைகளையும் விதிப்பதற்கான தீர்மானங்களை எடுத்துள்ளார்.

கொரோனா என்கிற கிருமியின் தாக்கம் உலக நாடுகளை எல்லாம் முடக்கிப்போட்டுள்ள இச்சூழலில். நாடுகளின் பொருளாதாரம் பாரிய சரிவைக் கண்டுள்ளது. அபிவிருத்தியடைந்து வரும் நாடாகிய இலங்கையின் பொருளாதாரத் துறையிலும் முன்னரைவிட தற்போது இவ்வீழ்ச்சி அதிகரித்தவண்ணமே உள்ளதாக பொருளாதார வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர். மக்களின் வாழ்வாதாரம். வேலைவாய்ப்பின்மை என்பன இன்று முக்கிய பிரச்சினையாக மாறியுள்ளன. பொருட்களுக்கான விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளதன் காரணமாக அன்றாட வாழ்க்கையினை நடத்துவதற்கு மக்கள் அல்லல்படும் நிலை உருவாகியுள்ளது.

இதேவேளை தற்போதைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அவர்கள் அதிரடியாக இலங்கை இறக்குமதி செய்யும் வாகனங்களை உடனடியாக தடைசெய்துள்ளார். எதிர்வரும் மாதங்களில் மீண்டும் வாகன இறக்குமதி ஆரம்பிக்கப்படும் எனக் கூறப்படுகிறது. இதன் காரணமாக இந்திய நிறுவனங்களுக்கும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இது அரசியலிலும் செல்வாக்கு செலுத்தும் ஒன்றாக இன்று மாறியிருக்கிறது.

யுத்தம் நிறைவுபெற்று 11 வருடங்களைக் கடந்துள்ள நிலையில் சீன நாட்டினது தலையீடுகள் இலங்கையில் அதிகரித்துள்ளது. சீனா இலங்கையில் பாரிய முதலீடுகளைச் செய்துள்ளது. கடன்களை வழங்கியுள்ளது. சீனாவின் இந்த ஆதிக்கம் இந்திய - அமெரிக்காவுக்கு சங்கடத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இலங்கைக்கு மேலும் கடன்களை வழங்க சீனா தயாராகவே இருக்கிறது. இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்குத் தடையினை விதித்துவிட்டு. சீனாவிலிருந்து பொருட்கள் இறக்குமதி செய்யும் நடவடிக்கையில் இலங்கை ஈடுபட்டுள்ளது என விமர்சனங்களும் எழாமலில்லை. சர்வதேச ரீதியாக இலங்கையினது வர்த்தக நடவடிக்கைகளில் இன்று முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

ராஜபக்ஷவின் புதல்வர்கள் சீனா சார்பானவர்கள் என்கிற நிலை தோன்றியுள்ளது. இலங்கையில் பாரிய அபிவிருத்தி வேலைகளை இன்று சீனா செய்கின்றது. இந்த அந்நிய நாடுகளின் தலையீடுகளும் ஆதிக்கமும் முதலீடுகளும் இலங்கையை அபிவிருத்திப் பாதையை நோக்கிப் பயணிப்பதை விடுத்துவிட்டு. இலங்கையினது வளங்கள் பெருவாரியாக சுரண்டலுக்கு உள்ளாவதுடன். உள்நாட்டு மக்களின் வாழ்வாதார நிலை கேள்விக்குறியாகியுள்ளது. இன்று கொழும்பில் நிர்மாணிக்கப்பட்டுவரும் வர்த்தக நகரம் ஒரு தனி நாடா என்கிற கேள்விகளும் தெற்கில் எழுந்துள்ளது. பாரிய குத்தகைக்கு இலங்கையினது நிலப்பரப்பு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மஞ்சள். உப்பு. பாம் எண்ணெய் போன்றவற்றை அரசு இறக்குமதிக்குத் தடை செய்துள்ளது. உள்நாட்டில் மஞ்சளின் கேள்வி அதிகரித்துள்ளது. மஞ்சளுக்கான விலை அதிகரித்துள்ளது. எனவே உள்நாட்டில் மஞ்சளின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யப்போகின்றோம் என்கிறது அரசு. உப்பு இறக்குமதியைத் தடைசெய்துள்ளதுடன் உள்நாட்டிலே தேவையான உப்பினை உற்பத்தி செய்யப்போகிறோம் என்கிறது. கிராம மட்டத்தில் உள்ளூர் உற்பத்திகள் அதிகரிக்கப்படவேண்டும் என்பது உண்மை. உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்துவதற்கான நடவடிக்கை கள் போதுமானதாக இல்லை. தொடர்ந்தும் உள்ளூர் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுகின்ற நிலையே இருக்கிறது. தமது தொழிலில் ஏற்படுகின்ற பாரிய நட்டம் காரணமாக அவர்கள் தமது தொழிலை விட்டுச் செல்கின்ற நிலைதான் ஏற்பட்டுள்ளது.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பாம் எண்ணெய் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் உள்ளூர் உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக சவர்க்கார உற்பத்தியாளர்கள். பேக்கரி உற்பத்தியாளர்கள் இதனால் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன். இலங்கையின் உணவகங்களில் பாம் எண்ணெய் பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருவதாக தரவுகள் தெரிவிக்கின்றன. இலங்கைக்கு வருடாந்தம் சுமார் 200.000 தொன் பாம் எண்ணை இறக்குமதி செய்யப்படுகிறது. குறிப்பாக மலேசியா. இந்தோனேசியா ஆகிய நாடுகளில் இருந்து இவை அதிகமாக இறக்குமதி செய்யப்படுகின்றன.

உலகளவில் 70 மில்லியன் தொன்னுக்கும் அதிகமாக பாம் எண்ணெய் உற்பத்தி நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

முள்ளுத்தேங்காய் உற்பத்தியால் நீர் வளங்கள் அற்றுப்போவதுடன். மண் வளம் பாதிக்கின்றமை உள்ளிட்ட நீண்டகால சூழல் பாதிப்புகள் ஏற்படுகின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது. தற்போது பயிரிடப்பட்டுள்ள முள்ளுத்தேங்காய் மரக் கன்றுகளை வருடமொன்றுக்கு 10 வீதம் என்ற அடிப்படையில் அகற்றி. குறித்த காணிகளில் இறப்பர் மற்றும் சூழலுக்கு ஏற்புடைய வேறு பயிர் செய்கைகளை திட்டமிடுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை பொருளாதாரத்திற்கு இருக்கும் பிரச்சினை. சில புள்ளிவிபரங்களுடாக நாங்கள் விளங்கிக் கொள்ளலாம். இலங்கையினுடைய மொத்த தேசிய உற்பத்தியுடன் ஒப்பிடும் பொழுது அரசாங்கத்தினுடைய உள்நாட்டுக் கடன் அதன் 41.6% ஆகவும். அந்நிய கடன் 41.2% ஆகவும். வருடத்திற்கான மொத்த கடன் செலுத்துகை 14.5% ஆகவும் அமைகிறது. ஆனால். அரசாங்கத்தினுடைய வருமானம் மொத்த தேசிய உற்பத்தியின் 16.0% தான் இருக்கிறது (நிதியமைச்சு ஆண்டறிக்கை 2018).

**மறவன்**

## சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள்

மனிதனை உருவாக்குவதில் இன்பமும் துன்பமும் சமபங்கு வகிக்கின்றன. சில நேரங்களில் இன்பத்தை விட துன்பமே மனிதனுக்கு சிறந்த ஆசானாக அமைகிறது. நன்மையைப் போல் தீமையில் இருந்தும் மனிதன் பாடம் கற்றுக்கொள்கிறான்.

உதவி செய். சண்டை போடாதே. ஒன்றுபடுத்து. அழிக்காதே. சமரசமாய் இரு. சாந்தம் கொள். வேறுபாடு காட்டாதே.

தீமையை எதிர்க்காதீர்கள். அகிம்சையே மிக உயர்ந்த ஒழுக்க லட்சியம் என்று ஆச்சாரியார்கள் உப தேசித்து இருக்கிறார்கள். இந்த உபதேசத்தை நம்மில் சிலர் அப்படியே கடைப்பிடிக்க முயல்வோமானால் சமுதாய அமைப்பே இடிந்து தூள் தூளாகி விடும்.

அயோக்கியர்கள் நம் சொத்துக்களையும் நம் வாழ்க்கையையும் பறித்துக் கொண்டுதங்கள் விருப்பப்படி நம்மை ஆட்டிவைப்பார்கள். இது நமக்குத் தெரியும். இத்தகைய அகிம்சை சமுதாயத்தில் ஒரேயொரு நாள் கடைப்பிடிக்கப்பட்டாலும் கூட பெரும் நாசமே விளைவாக இருக்கும்.

எவர் ஒருவருடைய நெஞ்சு ஏழை மக்களுக்காகத் துயரத்தில் அழுமோ. அவரையே நான் மகாத்மா என்பேன். அன்பு நெறியிற் சென்று உலகம் உய்வடைந்திட வழிகளைக் கூறும் முறை மதம் எனப்படும்.

இவ்வுலகில் பிறந்த நீங்கள் அதற்கு அடையாளமாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். இல்லையேல் உங்களுக்கும் மரங்கள் கற்களுக்கும் வேறுபாடு இல்லாமற் போய்விடும்.

வலிமையின்மையே ஒருவனின் துன்பத்திற்கு காரணம். நாம் பலவீனமாக இருப்பதாலேயே பொய்யும் திருட்டும் ஏமாற்று வேலைகளும் இன்னும் நம்மை விட்டு அகலவில்லை.

உலகில் உள்ள மக்கள் உன்னை புகழ்ந்தாலும் சரி இகழ்ந்தாலும் சரி நீ. உண்மை என்னும் பாதையிலிருந்து அணுவளவேனும் பிறழாமல் கவனமாக இருக்கவேண்டும்.

மனிதப் பிறவிதான் பிரபஞ்சத்திலேயே மிகச் சிறந்ததாகும். எல்லா மிருகங்களைக் காட்டிலும் எல்லாத் தேவர்களைக் காட்டிலும் மனிதர்களே உயர்ந்தவர்கள். மனிதர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் யாரும் இல்லை.

பணம் மட்டுமே வாழ்க்கையல்ல அதையும் தாண்டி மனிதன் அடைய வேண்டிய அனுபவங்கள் பல உள்ளன. மன நிம்மதி அன்பு தவம் தியானம் முதலிய குணங்கள் எல்லாம் பணத்தால் வருபவை அல்ல.

மற்றவர்களின் தெய்வீக இயல்பை வெளிப்படுத்த உதவி செய்வது தான் நம்முடைய தெய்வீக இயல்பை வெளிப்படுத்துவதற்கான ஒரே வழியாகும்.

உடல் பலவீனத்தையோ. மன பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் அணுகக்கூடாது! நமது சமுதாயம் இப்போது இருக்கும் தாழ்ந்த நிலைமைக்கு மதம் காரணம் அல்ல. மதத்தை முறையாகப் பின்பற்றாமல் போனதுதான் சமுதாயத்தின் வீழ்ச்சிக்குக் காரணம்.

வீரர்களே.கனவுகளிலிருந்துவிழித்தெழுங்கள்!தளைகளிலிருந்துவிடுபடுங்கள்! இளைஞனே. வலிமை. அளவற்ற வலிமை. இதுவே இப்போது தேவை.சிறந்த லட்சியத்துடன் முறையான வழியைப் பின்பற்றித் தைரியத்துடன் வீரனாக விளங்கு!

நீ செய்த தவறுகளை வாழ்த்து. அவைகள். நீ அறியாமலே உனக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருந்திருக்கின்றன. உனக்குத் தேவையான எல்லா வலிமையும். உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.

அன்பின் மூலம் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டு வந்து தந்தே தீரும். உங்களால் யாருக்கும் உதவி செய்ய முடியாது. மாறாகச் சேவைதான் செய்ய முடியும்.

நமது நாடு வீரர்களை வேண்டி நிற்கிறது. வீரர்களாகத் திகழுங்கள்! இளைஞர்களே. தேச முன்னேற்றம் என்னும் தேர்ச் சக்கரத்தைக் கிளப்புவதற்கு உங்கள் தோள்களைக் கொடுங்கள்.

இளைஞர்களே உங்களுக்கு என்னிடம் நம்பிக்கை இருக்குமானால் என்னை நம்புவதற்குரிய தைரியம் இருக்குமானால் ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்குக் காத்திருக்கிறது என்பேன்.

சோம்பேறித்தனத்தை எந்த வழியிலும் துரத்தியாக வேண்டும். சுறுசுறுப்பு என்பதற்கு எதிர்ப்பது என்பது பொருள். நமது நாடு வீரர்களை வேண்டி நிற்கிறது. வீரர்களாகத் திகழுங்கள்.

தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரம் ஆகும். அளவற்ற பலமும் பெண்ணைப் போல் இரக்கமுள்ள இதயமும் பெற்றவனே உண்மை வீரன்.

## சின்னக் கலைவாணர் நடிகர் விவேக் காலமானார்

நகைச்சுவை நடிகரும். தமிழில் 500க்கும் மேற்பட்ட படங்களில் நடித்தவரும். சின்னக் கலைவாணர் என்று புகழப்பட்டவருமான நடிகர் விவேக் (17) காலமானார். மரணிக்கும்போது அவருக்கு வயது 59. (16) வெள்ளிக்கிழமை வீட்டில் அவருக்கு கடுமையான மாரடைப்பு ஏற்பட்டு மயங்கி விழுந்தார். சிம்ஸ் மருத்துவமனையில் உடனடியாக சேர்க்கப்பட்ட அவருக்கு எக்மோ சிகிச்சை அளிக்கப்பட்டுவந்தது.

இந்நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். அவரது உடல். சென்னை விருகம்பாக்கம் பத்மாவதி நகரில் உள்ள அவரது இல்லத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அவருக்கு சிகிச்சை அளித்து வந்த சிம்ஸ் மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் விஜயகுமார் சொக்கன் வெளியிட்ட செய்திக்குறிப்பில். "காலை 11 மணியளவில் சுயநினைவிழந்த நிலையில். நடிகர் விவேக் மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவுக்கு அவரது குடும்பத்தினரால் கொண்டு வரப்பட்டார். அவரது உடல்நிலையை நிபுணர்கள் குழு பரிசோதித்தது. பின்னர் அவருக்கு ஆஞ்சியோ சிகிச்சை அளிக்கப்பட்டது. தற்போது தீவிர சிகிச்சைப் பிரிவில் எக்மோ சிகிச்சையில் உள்ள விவேக்கின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது." என்று கூறப்பட்டிருந்தது.

தடுப்பூசி போட்டுக்கொண்ட மறுநாள்

முன்னதாக. வியாழக்கிழமை சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள அரசு உயர் சிறப்பு மருத்துவமனையில் கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டார் விவேக். கொரோனா தடுப்பூசி போட்டுக்கொள்வது தொடர்பாக மக்களிடம் அச்சம் நிலவுவதாகவும். அந்த அச்சத்தைப் போக்கவே அரசு மருத்துவமனையில் தடுப்பூசி போட்டுக்கொண்டதாகவும் அவர் அப்போது ஊடகங்களிடம் தெரிவித்தார். இதற்காக. சுகாதாரத் துறை செயலாளர் ஜெ.ராதாகிருஷ்ணன். மருத்துவமனையின் டீன் மருத்துவர் ஜெயந்தி ஆகியோருக்கும். இரு மருத்துவர்களுக்கும் நன்றி தெரிவித்து அவர் ட்வீட் செய்திருந்தார்.

ஊசி போட்டுக் கொண்ட மறுநாளே அவருக்கு கடும் மாரடைப்பு ஏற்பட்டது. ஆனால். அவர் ஊசி போட்டுக் கொண்டதற்கும். மாரடைப்புக்கும் தொடர்பு இல்லை என்று மருத்துவமனை அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

தடுப்பூசி - தமிழக அரசு கருத்து

அதேநேரம். தடுப்பூசி தொடர்பான சர்ச்சைக்கு விளக்கமளித்த தமிழக சுகாதாரத்துறைச் செயலாளர் ஜெ.ராதாகிருஷ்ணன். "நடிகர் விவேக். மிகவும் நல்ல எண்ணத்தில்தான் தடுப்பூசி போட்டுக் கொண்டார். அவருக்கு மாரடைப்பு ஏற்பட்ட செய்தி மிகுந்த அதிர்ச்சியையும் அளிக்கிறது. மத்திய அரசின் தடுப்பூசி வழிகாட்டு நெறிமுறைகளின்படி. இதய கோளாறு. புற்றுநோய் போன்ற பல்வேறு நோய் உள்ளவர்கள் கட்டாயம் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில். விவேக்கின் நிலைமை எங்களுக்கும் மிகப்பெரிய அதிர்ச்சியாகத்தான் உள்ளது. நேற்றைய தினம் எங்களுடன் இருந்தவருக்கு. இன்றைய தினம் இதுபோன்ற இதய கோளாறு ஏற்பட்டுள்ளது. எனினும். இதற்கும் நேற்று தடுப்பூசி போட்டதற்கும் எந்த தொடர்பும் இல்லை" என்றார்.

பிரார்த்தனைகள்

தொடர்ந்து. நடிகர் விவேக் குணமடைய வேண்டும் என தமிழகம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் பிரார்த்தனைகளும் நடைபெற்றன. இந்நிலையில். சிகிச்சைப் பலனளிக்காமல் அதிகாலை 4.45 மணிக்கு அவர் இறந்துவிட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இது தமிழக மக்களிடையே பெருத்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சமூக அக்கறை உள்ள கலைஞன்

தற்போது 59 வயதாகும் நடிகர் விவேக். நகைச்சுவை நடிகராக இருந்தாலும் சமூக அக்கறையுள்ள கலைஞராகவே பார்க்கப்பட்டார். தான் நடித்த படங்களிலும் சமூக சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பியதால். சின்ன கலைவாணர்' என்று அவர் அழைக்கப்பட்டார். முற்போக்கான கருத்துகளை திரைப்படத்தில் பரப்பியதற்குப் பெயர் பெற்ற பழம் பெரும் நடிகர் என்.எஸ்.கிருஷ்ணன். கலைவாணர் என்று அழைக்கப்பட்டார். விவேக்கின் நகைச்சுவைகளும் அப்படிப்பட்ட கருத்துகளைத் தாங்கி வந்ததாக கருதப்பட்டதால். அவர் சின்னக் கலைவாணர் என்று புகழப்பட்டார். சுற்றுச்சூழல் பாதுகாப்பு. மரம் வளர்ப்பு என அக்கறை காட்டினார். இதுவரையில் 33.23.000 மரக்கன்றுகளை அவர் நட்டு வைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. ஒரு கோடி மரக் கன்றுகளை நடுவதை இலக்காகக் கொண்டிருந்தார் அவர். மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவர் நடிகர் விவேக்.





# பிராந்திய செய்தி



## புதிய கட்டுப்பாடுகள் குறித்த விவரம் வெளியானது!

நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் அதிகரித்துள்ள நிலையில் சுகாதார அமைச்சு புதிய வழிகாட்டல்கள் அங்கிய சுற்றுநிருபமொன்றை வெளியிட்டுள்ளது. இதற்கமைய, கொரோனா தொற்று அல்லாமல் மரணிப்போரின் இறுதிக்கிரியைகள் 24 மணிநேரத்துக்குள் செய்யவேண்டும்.

இறுதிக்கிரியைகளில் 25 பேர் மட்டுமே பங்கேற்க வேண்டும். பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மேலதிக வகுப்புகள், மறு அறிவித்தல் வரையிலும் மூடப்படும் வெசாக், ரமழான் பெருநாள்களை வீட்டிலிருந்தே கொண்டாட வேண்டும். ஹோட்டல்களில் கூட்டங்கள் மற்றும் ஒன்றுகூடல்களை நடத்துவதற்கு அனுமதி கிடையாது.

அரச ஊழியர்கள், பொதுநிர்வாகம் உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் வருகைத் தரவேண்டும். தனியார்துறை ஊழியர்கள் குறைந்தளவானோர் அலுவலகத்துக்கு சமூகமளிக்க வேண்டும். பொது போக்குவரத்து சேவைகளில் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக மாத்திரமே பயணிகளை ஏற்றிச்செல்லவேண்டும்.

மாநாடு, கருத்தரங்கு, கூட்டங்கள், பகல்போசன விருந்துபசாரம், மே.21 வரை தடைச்செய்யப்பட்டுள்ளன. அங்காடிகள், மொத்த வர்த்த நிலையங்கள், நிதி நிறுவனங்கள், புடவை கடைகள், சில்லறை கடைகளில், மொத்த நுகர்வோரின் எண்ணிக்கை 25 சதவீதத்துக்குள் மட்டுப்படுத்தவேண்டும்.

மத வழிபாட்டு இடங்களில் பொதுமக்கள் ஒன்றுக்கூட முடியாது. கைதிகளை பார்வையிட முடியாது. நீதிமன்றத்தில் முழு கொள்ளளவு 25 சதவீதத்துக்கு இருக்கவேண்டும். மக்கள் வருகைதரமுடியும். இசைக்கச்சேரி, கரையோர ஒன்றுகூடல்கள், உற்சவங்களுக்கு முழுத்தடை மே.4 முதல் மே 20 வரை திருமண வைபவங்களுக்கு அனுமதி இல்லை. மே.20 ஆம் திகதியன்று நாட்டில் காணப்படும் கொரோனா நிலைமையை கருத்தில்கொண்டு அது திருத்தப்படும்.




## கொரோனாவுக்கு சிகிச்சையளிக்க ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கும் அனுமதி!

கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு அனுமதி வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே இதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனா தொற்று வேகமாகப் பரவிவரும் நிலையில், வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பைக் கருத்திற்கொண்டு இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுகாதார நடைமுறைகளிற்கு ஒத்துழைக்காத உணவகம் தனிமைப்படுத்தப்பட்டது - ஐவர் கைது

வவுனியா கொறவப்பொத்தானை வீதி பள்ளிவாசலுக்கு அருகாமையில் அமைந்துள்ள உணவம் ஒன்று சுகாதாரபிரிவினரால் அன்று(சனிக்கிழமை) தனிமைப்படுத்தப்பட்டதுடன், சுகாதார பரிசோதகர்களின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் ஐந்து பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



வவுனியாவில் அமைந்துள்ள உணவகங்களில் பணிபுரிபவர்களிடம் பிசிஆர் பரிசோதனையினை முன்னெடுப்பதற்கும், சுகாதார நடை முறைகள் தொடர்பாக விளக்கமளிப்பதற்காகவும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு வருமாறு கடந்த இரு தினங்களிற்கு முன்பாக பணிக்கப்பட்டிருந்தது.

எனினும் குறித்த உணவகத்தில் பணிபுரியும் சிலர் சுகாதார வைத்திய அலுவலகத்திற்கு சமூகமளிக்கவில்லை. இந்நிலையில் அன்று(சனிக்கிழமை) சுகாதார பரிசோதகர்களால் குறித்த உணவகம் தனிமைப்படுத்தப்பட்டது. இதேவேளை தனிமைப்படுத்தல் செயற்பாட்டினை முன்னெடுக்கச்சென்ற சுகாதார பரிசோதகர்களுடன் குறித்த உணவகத்தின் ஊழியர்கள் சிலர் முரண்பட்டிருந்தனர்.

இதனையடுத்து சுகாதார பரிசோதகர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்ததாக தெரிவித்து ஐந்து பேர் வவுனியா பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 187 பேர் கைது

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மேலும் 187 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அன்று(ஞாயிற்றுக்கிழமை) நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவர்களில் அதிகமானவர்கள் திருகோணமலை மாவட்டத்திலேயே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய இதுவரையில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 4 ஆயிரத்து 642 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## நாட்டில் மேலும் 9 பேர் கொரோனா தொற்றினால் உயிரிழப்பு!

நாட்டில் மேலும் ஒன்பது பேர் கொரோனா தொற்றினால் மரணித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இலங்கையில் கொரோனா தொற்றினால் மரணித்தவர்களின் மொத்த எண்ணிக்கை 687ஆக அதிகரித்துள்ளது.



# சினி துளிகள்

## கொரோனாவில் இருந்து தப்பிக்க பூஜா ஹெக்டே யோசனை

தமிழில் முகமூடி படத்தில் அறிமுகமான பூஜா ஹெக்டே, தற்போது விஜய் ஜோடியாக புதிய படத்தில் நடித்து வருகிறார். சமீபத்தில் பூஜா ஹெக்டேவுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டு வீட்டில் தனிமைப்படுத்திக் கொண்டார். உடற்பயிற்சிகள், யோகா மற்றும் உணவு முறைகள் மூலம் உடல்நலம் தேறி இருக்கிறார். யோகா செய்யும் வீடியோவையும் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டு கொரோனாவில் இருந்து தப்பிக்க ஆலோசனைகள் வழங்கி உள்ளார். பூஜா ஹெக்டே கூறும்போது, "கொரோனா காலத்தில் அனைவரும் முக கவசம் அணிவது அவசியம். அடிக்கடி கிருமி நாசினியால் கைகளை சுத்தம் செய்யவேண்டும். ஆவி பிடிப்பதும் முக்கியம். நான் தினமும் இரண்டு முறை தவறாமல் ஆவி பிடிக்கிறேன். வெந்நீர் குடித்தால் நல்லது. அதிகம் தண்ணீர் குடித்தால் உடலில் உள்ள தொற்றுகள் குறைய வாய்ப்பு இருக்கிறது. நான் தினமும் மூன்று லிட்டர் தண்ணீர் குடிக்கிறேன்.


யோகா எல்லோரும் செய்யுங்கள். நான் பிரணாயாம பயிற்சி எடுக்கிறேன். இது உடலுக்கும், மனதுக்கும் ரொம்ப நல்லது. கொரோனாவில் இருந்தும் பாதுகாக்கும். நான் தினமும் செய்கிறேன். ஒரஞ்சு, சாத்துக்குடி பழங்கள் ஜூஸ் சாப்பிடுவது நல்லது. எல்லோரையும் விட்டு 6 அடி தள்ளி இருங்கள்" என்றார்.



## சூப்பர்ஹிட் படத்தின் ரீமேக்கீல் உதயநிதிக்கு ஜோடியாகும் விஜய் படம் நடிகை - யார் தெரியுமா?

பாலிவுட்டில் கடந்த 2019ஆம் ஆண்டு வெளியாகி விமர்சன ரீதியாகவும், வசூல் ரீதியாகவும் வெற்றிபெற்ற படம் ஆர்ட்டிகிள் 15. கனா எனும் வெற்றிப்படத்தை கொடுத்த படத்தை இயக்கிய அருண்ராஜா காமராஜ். இப் படத்தின் தமிழ் ரீமேக்கை இயக்கி வருகிறார்.

இப்படத்தில் உதயநிதி ஸ்டாலின் ஹீரோவாக நடிக்கிறார். மேலும் இப்படத்தில் உதயநிதி ஸ்டாலினுக்கு ஜோடியாக தன்யா ரவிச்சந்திரன் நடிக்கிறார் என தகவல் வெளியாகியுள்ளது. இவர் ஏற்கனவே கருப்பன் படத்தில் மக்கள் செல்வன் விஜய் சேதுபதி நடித்து வெளியான கருப்பன் படத்தில் அவருக்கு ஜோடியாக நடித்துள்ளார். நடிகர் உதயநிதி ஸ்டாலின் போலீஸ் அதிகாரி வேடத்தில் நடித்து வருகிறார். அவர் போலீஸ் அதிகாரியாக நடிக்கும் முதல் படம் இது என்பது குறிப்பிடத்தக்கது.



## அஜித்குமார் நடிக்கும் வலிமை படத்துக்கு விலைபேசும் ஓ.டி.டி. தளங்கள்

கொரோனா சினிமா தொழிலை புரட்டி போட்டுள்ளது. தியேட்டர்களை மூடி உள்ளதால் திரைக்கு வர தயாராக இருந்த 50-க்கும் மேற்பட்ட படங்கள் முடங்கி உள்ளன.

இந்த சிக்கலை சாதகமாக்கிய ஓ.டி.டி. தளங்கள் ஏற்கனவே சூர்யாவின் சூரரை போற்று, விஜய்சேதுபதியின் க.பெ.ரணசிங்கம், நயன்தாரா நடித்துள்ள மூக்குத்தி அம்மன், கீர்த்தி சுரேசின் பெண்குயின் உள்ளிட்ட பல படங்களை கைப்பற்றி ஓ.டி.டி.யில் வெளியிட்டன. தனுஷ் நடித்துள்ள ஜெகமே தந்திரம் படத்தையும், ஓ.டி.டி. தளம் வாங்கி ஜூன் மாதம் வெளியிடுகிறது. விஜய்சேதுபதியின் துக்ளக் தர்பார், திரிஷா நடித்துள்ள ராங்கி, சிவகார்த்திகேயனின் டாக்டர், நயன்தாரா நடித்துள்ள நெற்றிக்கண் ஆகிய படங்களையும் ஓ.டி.டி.யில் வெளியிட பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன.



இந்த நிலையில் அஜித்குமார் நடித்துள்ள வலிமை படத்துக்கும் ஓ.டி.டி. தளங்கள் விலை பேசுவதாக பரபரப்பு தகவல் பரவி வருகிறது. இந்த வருடம் ஒகஸ்ட் மாதம் திரைக்கு வருவதாக இருந்த வலிமை படம் கொரோனாவால் தாமதமாகி உள்ளது. இன்னும் ஒரு வாரம் படப்பிடிப்பு பாக்கி உள்ளது. தீபாவளிக்கு படத்தை திரையிட படக்குழுவினர் ஆர்வமாக உள்ளனர். இந்த நிலையில்தான் ஓ.டி.டி. தளங்கள் வலிமையை வாங்க போட்டி போடுவதாக கூறப்படுகிறது. ஆனாலும் அஜித்குமார், தயாரிப்பாளர் போனிகபூர் ஆகியோர் படத்தை தியேட்டரில் திரையிடும் முடிவில் இருப்பதாக கூறப்படுகிறது. ஏற்கனவே விஜய்யின் மாஸ்டர் படத்தை வாங்க ஓ.டி.டி. தளங்கள் எடுத்த முயற்சி தோல்வி அடைந்து படம் தியேட்டரில் வெளியானது குறிப்பிடத்தக்கது.

## தெலுங்கில் ரீமேக்காகும் தனுஷின் கர்ணன் திரைப்படம், யார் ஹீரோ தெரியுமா?

நடிகர் தனுஷ் நடிப்பில் இயக்குனர் மாரி செல்வராஜ் இயக்கத்தில் சில தினங்களுக்கு முன் வெளியான திரைப்படம் தான் கர்ணன்.

இப்படம் தனுஷ் நடிப்பில் வெளியான மிக சிறந்த ஒன்றாக ஆகியுள்ளது. அந்த அளவிற்கு இப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

இந்நிலையில் தற்போது கர்ணன் படத்தை தெலுங்கில் ரீமேக் செய்யவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆம், சாயி ஸ்ரீநிவாஸ் பெல்லம்கொண்டா நடிப்பில் அப்படத்தை தெலுங்கில் ரீமேக் செய்ய உள்ளதாக கூறப்படுகிறது.

இதனிடையே கர்ணன் படத்தின் வெற்றியை தொடர்ந்து நடிகர் தனுஷ் மீண்டும் இயக்குனர் மாரி செல்வராஜ் இயக்கத்தில் நடிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.






## தலைமுடி உதிர்வை தடுக்கும் வெங்காய ஹேர்பேக் !!

வெங்காய ஹேர்பேக் தலைமுடி உதிர்வுப் பிரச்சினையை போக்குகிறது. நம்மில் பலரும் சந்திக்கும் தலையாய பிரச்சினை தலைமுடி உதிர்வு தான். இதை தீர்க்க வெங்காய ஹேர்பேக்கினை எப்படி செய்வது என்றும், அதனை எப்படிப் பயன்படுத்துவது என்பதை பார்ப்போம்.



**தேவையானவை:**– வெங்காயம் - 2, மயோனைஸ் - 3 ஸ்பூன், தயிர் - 25 மில்லி.

**செய்முறை:** வெங்காயத்தினை சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். அடுத்து வெங்காயத்துடன் நீர் சேர்த்து மிக்சியில் போட்டு ஜுஸ் எடுத்துக் கொள்ளவும்.

அதனுடன் தயிர் மற்றும் மயோனைஸ் சேர்த்து 15 நிமிடங்கள் ஊறவிட்டுப் பயன்படுத்தவும். இந்த வெங்காய ஹேர்பேக்கினை தலைமுடியில் அப்ளை செய்து 30 நிமிடங்கள் ஊறவிட்டு சீயக்காய் கொண்டு அலசினால் தலைமுடி உதிர்வுப் பிரச்சினை தீர்வுக்கு வரும்.

சிறிய வெங்காயத்தை அரைத்து முடியின் மயிர்க் கால்களில் பூசி வந்தாலே போதும், முடிவளர ஆரம்பிக்கும். வாரத்திற்கு இரு நாட்களை மட்டும் தேர்ந்தெடுங்கள். தினமும் தலைக் குளிக்க வேண்டாம். 5 அல்லது 6 வெங்காயத்தை எடுத்துக் கொண்டு அதை மை போல் அரைத்து வைக்கவும். அரைத்த வெங்காயத்தை முடியின் வேர்க்கால்களில் படும் படியும், வழுக்கை விழுந்த இடத்திலும் தேய்க்க வேண்டும்.

உலர்ந்தவுடன் சீயக்காய் பவுடரில் கஞ்சி கலந்து தலைக்கு குளிக்கவும். இதனால் முடியில் ஈரப்பசை இருந்து கொண்டே இருக்கும். இவ்வாறு வாரத்திற்கு இரண்டு நாட்கள் என்று பயன்படுத்திவர தலைமுடி வளர ஆரம்பிக்கும்.

## முகத்தின் பொலிவை இயற்கை வழியில் அதிகரிக்க சில டிப்ஸ் !!

முக்கியமாக மஞ்சள் தூள் முகப் பொலிவை அதிகரிப்பதோடு, பருக்கள், முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் போன்ற பல சரும பிரச்சனைகளையும் போக்கும்.

மஞ்சளைக் கொண்டு ஒருவர் அடிக்கடி வீட்டிலேயே ஃபேஸ் பேக் போட்டு வந்தால், அதில் உள்ள ஆன்டி-ஆக்ஸிடன்ட் மற்றும் ஆன்டி-பாக்டீரியல், ஆன்டி-வைரல், அழற்சி எதிர்ப்பு போன்ற மருத்துவ பண்புகளால் சருமத்தின் அழகு மேம்படும்.

ஒரு பௌலில் ஒரு சிட்டிகை மஞ்சள் தூள், 1/2 டீஸ்பூன் கடலை மாவு மற்றும் 1 டேபிள் ஸ்பூன் ரோஸ் வாட்டர் சேர்த்து நன்கு பேஸ்ட் செய்து கொள்ள வேண்டும். பின் அந்த கலவையை முகத்தில் தடவி 15 நிமிடம் நன்கு ஊறவைக்க வேண்டும். பின்பு நீரால் முகத்தைக் கழுவ வேண்டும். இறுதியில் நேச்சுரல் ஸ்கின் டோனரான ரோஸ் வாட்டர் கொண்டு முகத்தைத் துடையுங்கள்.

ஒரு சிறிய பௌலில் 1 சிட்டிகை மஞ்சள் தூள், 2-3 துளிகள் லாவெண்டர் ஆயில் மற்றும் 2 டீஸ்பூன் தயிர் சேர்த்து கலந்து கொள்ள வேண்டும். பின் அந்த ஃபேஸ் பேக் கலவையை முகத்தில் தடவி 10 நிமிடம் நன்கு காய வைக்கவேண்டும். இறுதியில் வெதுவெதுப்பான நீரால் முகத்தைக் கழுவுங்கள்.

ஒரு பௌலில் 1 டீஸ்பூன் தேனில் 1 சிட்டிகை மஞ்சள் தூள் சேர்த்து கலந்து கொள்ள வேண்டும். பின்பு அதனை முகத்தில் தடவி 10 நிமிடம் நன்கு காய வைக்க வேண்டும். பின் வெதுவெதுப்பான நீரால் முகத்தைக் கழுவ வேண்டும். இந்த மாஸ்க்கை வாரத்திற்கு 3-4 முறை செய்ய நல்ல பலன் கிடைக்கும்.








எல்லாவற்றையும்
எல்லோரிடமும்
சொல்லாதே!
சிலரிடம் கேட்பதற்கு
காதுகள் இருக்கும்,
புரிந்து கொள்வதற்கு
மனம்
இருக்காது...!!

தொகுப்பு :– ஹாசினி

# புலம்பெயர் தமிழர்களைக் குறிவைத்து 'Operation Trust' இராணுவ நடவடிக்கை

கடந்தவாரத் தொடர்ச்சி...

சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினர் ஏற்பாடு செய்த குழு, பல்வேறு இடங்களில் மறைந்திருந்த போராளிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தாம் மீள ஒருங்கிணைந்து போராட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்கள். தம்மை அழித்த சிறிலங்காப் படையினரைப் பழிவாங்கவேண்டும் என்று சபதம் எடுத்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் புலம் பெயர் நாடுகளில் தேசியம் பேசிக்கொண்டிருந்த ஒரு தரப்பினரால் அவிழ்த்துவிடப்பட்ட கதைகளும், மாயைகளும் கூட, சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினரின் இந்த இரகசிய நடவடிக்கைக்குப் பெரிதும் உதவவே செய்தன. 'அதோ அவர் அங்கே இருக்கின்றார். இதோ ஐயாயிரம் பேருடன் அந்த தளபதி வன்னியில் மறைந்திருக்கிறார்'.. புலிகள் வன்னியில் இன்று தாக்குதல். பல இராணுவத்தினர் காயம். ஆனால் செய்தியை சிறிலங்கா அரசாங்கம் மறைத்துவிட்டது...' வன்னியில் பல சிறிலங்கா படையினரைக் காணவில்லை..' இதுபோன்று புலம்பெயர் தமிழர்களில் ஒரு பிரிவினர் ஆர்வக்கோளாரினால் மேற்கொண்ட பிரச்சாரங்கள், சிறிலங்கா படையினர் மேற்கொண்ட அந்த இரகசிய நடவடிக்கைக்குப் பெரிய அளவில் கைகொடுத்தது.

மீள ஒருங்கிணைய முயன்றவர்கள் சிறிலங்காப் படையினரிடம் வசமாகவே மாட்டிக்கொண்டார்கள். பல கரும்புலிகள் கூட இந்த இரகசியச் சதி நடவடிக்கையின் பொழுது அகப்பட்டுக்கொண்டார்கள். பல ஆண்டுகள் கொழும்பிலும் அதன் சுற்றுவட்டத்திலும் இரகசியமாகச் செயற்பட்டு வந்த புலிகளின் பல உளவாளிகள் சிறிலங்காப் படையினரிடம் மிக இலகுவாகவே அகப்பட்டுக் கொண்டார்கள்.

சிறிலங்காபுலனாய்வாளர்களால் இயக்கப்பட்ட இந்த அணியினர் புலம்பெயர் தேசங்களில் செயற்பட்ட முக்கிய செயற்பாட்டாளர்களையும் தொடர்பு கொண்டு, பல்வேறு தகவல்களைப் பெற்றார்கள். பெருமளவு பணத்தை அனுப்பிவைக்கும்படி கேட்டு அதனைப் பெற்றார்கள். வெளிநாடுகளில் இருந்த செயற்பாட்டாளர்களுடன் இலங்கையில் தொடர்புகளில் இருந்த நபர்களையும் தமது இந்த நடவடிக்கையினூடாகக் கண்டுபிடித்தார்கள்.

இப்பொழுது மறுபடியும் பழைய கேள்விக்கு வருவோம். இதேவகையிலான நடவடிக்கையை புலம்பெயர் தமிழர்களைக் குறிவைத்து சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவு செய்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளதா? நிச்சயமாக உள்ளது என்பதில் சந்தேகம் இல்லை.

தமிழ் தேசியத்தின் மீது புலம்பெயர் தமிழர்கள் கொண்டுள்ள வெறி; புலம்பெயர் தமிழர்களின் மிகப் பெரிய பலம் என்பது உண்மையே. அதே வேளை இந்த வெறிதான் புலம்பெயர் தமிழர்களின் மிகப் பெரிய பலவீனம் என்பதையும் நாம் ஒப்புக்கொண்டுதானாக வேண்டும்.

'தமிழ் தேசியம்' என்று கூறிக்கொண்டு யாரும் எம்மை இலகுவாக ஏமாற்றிவிடும் அளவிற்கு இந்த வெறிக்கு நாம் அடிமையாகிக் கிடக்கின்றோம். பல வியாபாரிகள் தேசியம் பேசி எம்மை, எமது பொருளாதாரத்தை வளைத்துப் போடுவதை நாம் தெரிந்துகொண்டே அனுமதித்துக் கொண்டிருக்கின்றோம் தேசியத்தின் பெயரால்.

எனவே எமது மிகப் பெரிய பலமாக நாங்கள் நினைத்துக் கொண்டிருக்கின்ற தேசியத்தின் மீதான எமது கண்மூடித்தனமான பற்று, மிதமிஞ்சிய வெறி - இவற்றினையே எமக்கு எதிரான தமது நகர்வுகளுக்கு எமது எதிரி பயன்படுத்தமுனையும்சந்தர்ப்பம் இருக்கவே செய்கின்றது.

'இல்லை இல்லை.. அது ஒருபோதும் முடியாது..' என்று சிலர் கூறலாம். ஆனால் தாம் நேசிக்கின்ற தேசியத்தின் பெயரால் இன்று சில தேசியவாதிகள் தெருவில் நின்று சட்டையைக் கிழித்துக்கொண்டு அடிபடுவது எமது பலவீனத்திற்கு ஒரு சிறந்த உதாரணம்.

எம்மைவிட வேகமாக தமிழ் தேசியம் பேசிக்கொண்டு 'Operation Trust' உளவு நடவடிக்கை எம்மத்தியில் மேற்கொள்ளப்படக் கூடியதற்கான சாத்தியத்தை நாம் இலகுவாக உதறித்தள்ளிவிட முடியாது.

இந்தியாவில் புலிகள் மீள ஒருங்கிணைகின்றார்கள் என்ற கதை எம்மவர்கள் மத்தியில் தற்பொழுது மிக வேகமாக பரவிக் கொண்டிருக்கின்றது. இந்தக் கதையின் தோற்றுவாய் எது என்று பார்த்தால் சிறிலங்காவின் பாராளு மன்றத்தில்தான் இந்தக் கதை முதன்முதலில் அவிழ்த்து விடப்பட்டது. அதுவும் சிறிலங்காவின் பிரதமர்தான் இந்தக் கதையை பகிரங்கமாகத் தெரிவித்தார். அவர் சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவினரை மேற்கோள்காட்டித்தான் இந்தக் கதையைத் தெரிவித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட பல விடுதலைப் புலி முக்கியஸ்தர்கள், திடீரென்று புலம்பெயர் நாடுகளில் தோன்றி தேசியம் பேசுவது இன்று சாதாரண நிகழ்வாக மாறி வருகின்றது. 'நான் வன்னியில் தலைவருடன் நின்றனான்..' என்று கூறிக்கொண்டு நிறையப் பேர் ஐரோப்பாவில் தற்பொழுது அரசியல் செய்ய ஆரம்பித்துளார்கள். 'தலைவருடன் நின்ற நீங்கள் எப்படித் தப்பி வந்தீர்கள்?" "ஏன் தலைவரை விட்டுவிட்டு இங்கு வந்தீர்கள்?" இதுபோன்ற கேள்விகளை நாங்களும் கேட்பதில்லை. அதற்கான பதிலை அவர்களும் சொல்வதில்லை.

இன்றும் குறிப்பாகப் பார்த்தால், இவர்களில் அனேகமானோர் சிறிலங்கா விமான நிலையம் வழியாகவே வந்திருக்கின்றார்கள். இவர்களில் பலர், வவுனியாவில் சிறிலங்கா தடுப்பு முகாமில் மாதக்கணக்காக சிறிலங்காப் படையினரால் தடுத்து வைக்கப் பட்டிருந்தவர்கள். வன்னியில் புலிகளுக்குச் சாப்பாடு கொடுத்தவர்கள், சென்றியில் நின்றவர்கள், எல்லைக் காவல் கடமைகளில் ஈடுபட்டவர்கள் என்று பலரும் இப்பொழுது கூட சிறிலங்கா படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையில், அனைவரும் அறிந்த விடுதலைப்புலி முக்கியஸ்தர்கள், தலைவருடன் இருந்தவர்களால் எப்படி சிறிலங்கா இராணுவத்தின் வாய்களுக்குள் இருந்து வெளியேற முடிந்தது? எப்படி சிறிலங்கா படையினரின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு சிறிலங்காவின் ஒரே சர்வதேச விமான நிலையம் ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கு வர முடிந்தது? இது பலராலும் சந்தேகத்துடனேயே பார்க்கப் படுகின்றது. இவர்கள் 'Operation Trust' உளவு நடவடிக்கைக்காக அனுப்பப் பட்டவர்களா என்கின்ற கோணத்திலும் சிந்திக்க வேண்டிய நிலையில்தான் இன்று புலம்பெயர் தமிழர்கள் இருக்கின்றார்கள்.

இன்று புலம்பெயர்ந்த நாடுகளில் கடந்த காலங்களில் தமிழ் தேசிய எதிரிகளாக வலம் வந்தவர்களின் செயற்பாடுகளை சற்று ஆழமாக நோக்குகின்ற பொழுது இந்தச் சந்தேகம் மேலும் வலுவடைகின்றது. ஐரோப்பிய நாடுகளில் தமிழ் தேசியவாதிகளால் மேற்கொள்ளப்படுகின்ற சாதாரணமான ஒரு மே தின ஊர்வலத்திலேயே புகுந்து கலாட்டா பண்ணுகின்ற மாற்றுக் குழுவினர் அல்லது சிறிலங்காவின் கைக்கூலிகள், தற்பொழுது புலம்பெயர் தமிழர்கள் மேற்கொள்கின்ற போராட்டங்கள் தொடர்பில் பெரிய அளவில் அக்கறை காண்பிப்பதை காண முடிவதில்லை. மகிந்தவிற்கு எதிராகபுலம்பெயர்மண்ணில்ஒரு பெரிய வேள்வியே நடைபெற்று வரும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூட, இப்படிப்பட்டவர்கள் ஒரு புன்சிரிப்புடன் மௌனம் கடைப்பிடித்து வருவதை ஒரு வித்தியாசமான அதே வேளை அவதானிக்கப்பட வேண்டிய ஒரு நகர்வாகவே நான் பார்க்கின்றேன்.

இது, சிறிலங்கா இராணுவம் புலம்பெயர் மண்ணில் மேற்கொள்கின்ற 'Operation Trust' போன்ற ஒரு உறுதியான, நீண்டகால செயற்பாட்டுக்கான வழிவிடுதலாகக் கூட இருக்கலாம். புலம்பெயர் தமிழர்கள் சற்று ஆழமாகச் சிந்திக்கவேண்டிய தருணம் இது.

இந்த இடத்தில் ஒரு முக்கிய விடயத்தை தெளிவுபடுத்திவிட விரும்புகின்றேன். வன்னி மற்றும் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் மரணத்தின் பிடியில் இருந்து மயிரிழையில் தப்பித்து, உயிரைக் கையில் பிடித்தபடி மேற்குலகில் தஞ்சமடைந்திருக்கும் பலர் இன்று எம்மத்தியில் இருக்கின்றார்கள். அவர்களின் உண்மையும், தூய்மையும் உண்மையிலேயே மெச்சத் தக்கது. அவர்களது வழிகாட்டல் களும், ஆலோசனை களும் புலம்பெயர் தமிழர்களுக்கு நிச்சயம் தேவை என்பதில் சந்தேகம் இல்லை.

ஆனாலும் இவர்கள் மத்தியில் கலந்து சிறிலங்காப் புலனாய்வாளர்களால் அனுப்பப் படும் உளவு ஏஜண்டுக்கள் பற்றிய எச்சரிக்கை உணர்வையும் நாம் கொண்டிருப்பது இச்சந்தர்ப்பத்தில் மிக மிக அவசியம். இல்லாவிட்டால், புலம்பெயர் தமிழர்களின் விடுதலை உணர்வை திசைதிருப்பும் ஒருவகை 'Operation Trust' உளவுநடவடிக்கைக்கு அனியாயமாகப் பலியாகிப்போன மற்றொரு இனம் என்கின்ற பெயர் வரலாற்றில் எமக்கு கிடைத்துவிடும்.

சுழியோடி

# தமிழரசி

வன்னியின் தெற்கு எல்லையாம் வவுனியா யுத்தத்தின் வாசனையை பெரிதும் உணராத காலங்கள் அவை நான் பள்ளிப்படிப்பின் கடைசிக்காலங்களிலும் ஈழதேசம் யுத்தத்தின் கடைசிக்காலங்களிலும் போராடிக்கொண்டிருந்தோம்

யுத்தத்தின் இடப்பெயர்வில் தன்னகத்தே வந்தோரை வாழவைத்துக்கொண்டிருந்த எங்கள் ஊர் வந்தோரை வாழவைக்கும் வன்னித்தாய் என்ற பெயரை பெற்றதும் அதனாலோ என்னவோ...

அவளை நான் முதன் முதலாய் கண்டதும் எனக்குள்ளாய் எதோ ஒன்று எனக்கானவள் இவள் தான் என்பதான உணர்வு தமிழரசி பெயரிற்கு ஏற்றால் போல் அரசி தான் அவளும் கிளிநொச்சி மண்ணின் அரசியை யுத்தம் எனக்காகவே வவுனியாவிற்கு இடம்பெயரவைத்திருந்தது போல..

நான் எல்லோரிடமும் சகயமாகவே பேசிப்பழகுவதுண்டு ஆனால் அவளிடம் மட்டும் ஏனோ என்னால் பேசவே முடிவதில்லை அவளை நேரில் காணும் போதெல்லாம் எனையறியாமலே என் உடல் நடுங்க வெளிக்கிடும் இனம் புரியத உணர்வது அவளும் அதை அறிந்திருக்க வேண்டும்.

இப்படியாக நாட்கள் சில நகர்ந்தோட பாடசாலையில் நான் யாரையோ காதலிக்கிறேன் என்றான வதந்தி ஒன்றும் பரவவிடப்பட்டிருந்தது யார் மூட்டிய தீ என்று இன்றுவரை தெரியவில்லை ஆனால் அன்றைய பொழுதுகளில் எனது நண்பர்கள் மத்தியில் பிரதான பேசு பொருளாக்கப்பட்டிருந்த அந்த வதந்தி அவளையும் சென்றடைந்திருந்ததோ என்னவோ.

வழமையகவே நான் பாடசாலைக்கு நேரத்திற்கு செல்வது வழமை அன்று அவளும் நேரத்திற்கு வந்திருந்தாள்

வானம் ஏதோ மப்பும் மந்தாரமுமாய் தான் இருந்தது.

என்னோடு அதுவரை நேரில் பெரிதாய் பேசியிரதாவள் "யார் அது சுதாகர்" என்றாள் என்னிடம் தான் பேசுகிறாளா!!! ஆம் எனது பெயரைத்தான் அவள் நா உச்சரிக்கிறது

அவள் பேசியது என்னிடம்தான் என உறுதிப்படுத்திக்கொள்ளவும் அருகில் யாரும் நிற்கிறார்களா என்று பார்க்கவும் சுற்றியும் ஒரு முறை பார்த்தேன் யாரும் இல்லை நானும் அவளும் மட்டுமே என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு "யார் எது தமிழரசி யாரைக்கேக்குறீர் !" என்றேன்

"அதுதான் நீங்கள் யாரையோ காதலிப்பதாக சொன்னார்களே அது தான் யார் என்று கேட்டேன் "

என்றவள் வார்த்தைகள் என் செவிகளை எட்டமுன் அவள் பார்வை தரையைத்தொட்டிருந்தது. அன்று அவள் பார்வையில் கம்பனின் கவிவண்ணம் தோற்றுவிடும்போலிருக்க"அதுநீதான் "என்றேன் "விளையாடாதையும் "என்றாவறே தாரமாய் நடக்க ஆரம்பித்தாள் இதைவிட்டால் வேறு சந்தர்ப்பம் கிடைக்கப்போவதில்லை என்பதால் "நான் விளையாடல அது நீதான் தமிழரசி " என்றதும் பதிலேதும் சொல்லாமல் மெல்லிய புண்ணகையோடு விடைபெற்றாள் நானும் பெரிதாய் வற்புறுத்தாமல் மனதில் போட்டு வைத்திருந்தவற்றை அவளிடம் சொன்ன திருப்தியோடு அன்றைய நாளும் கழிந்தது...

அடுத்த நாள் வழமையான வெள்ளிக்கிழமை நானும் வழமை போல பாடசாலைக்கு சென்றேன் பாடங்கள் துவங்கியும் தமிழரசி பாடசாலை வந்ததாய் தெரியவில்லை அவள் பாடசாலைக்கு வராமல் இருப்பதும் என்னால்தானோ என்றான பதட்டம் அன்றைய நாள் முழுவதிலும் என்னை சூழ்ந்து கொள்ள பாடசாலை முடிய நேராய் அவள் வீட்டுக்கு சென்று விடுவதான முடிவிலிருந்தேன்

அப்பொழுதான் எழிலினி வந்தாள் தமிழரசியின் தங்கை அவள் "சுதாகர் அண்ணா உங்கள பின்னேரம் 3 மணிபோல பிள்ளையார் கோயிலடிக்கு அக்கா வரச்சொல்லி விட்டவா முக்கியமான ஏதோ கதையாம் கட்டாயம் வரட்டாம் என்டாள் மறக்காம வாங்க இண்டைக்கு காச்சல் அது தான் அக்கா வகுப்புக்கு வரல "என்றாள் எழிலினி நேரத்தை பார்தேன் இரண்டு மணியாகியிருந்தது

வேகம் வேகமாக புறப்பட்டு கோயிலடிக்கு ஓடினேன் " தம்பி கோயில்பக்கம் ஒரே ஆமியாக்கிடக்கு பாத்துப்போங்கோ" வீதியால் வந்த முதியவர் சொல்லிப்போக நானும் "சரி ஐயா என்றாவறே " சட்டைப்பையில் அடையாள அட்டை இருப்பதை உறுதிப்படுத்திக்கொண்டு கோயிலை நோக்கி நகர்ந்தேன்

எனக்காக தமிழரசி தாரமாய் காத்திருப்பதை கண்டு தமிழரசி என்றாவரே அவள் அருகில் செல்ல வீதியைக்கடக்க தயாராகிய போது பாரிய வெடிச்சத்தம் யாரோ என்னை இழுத்துதாரமாய்வீதிஓரத்தில்இருந்த வாய்க்காலிற்குள் போட்டார்கள் அந்த நொடி நான் நிதானித்து எழுவதற்கு முன்னாராய் வெடிச்சத்தத்தோடு துப்பாக்கிச்சன்னங்கள் நான்கு திசையும் சீறிப்பாயத்துவங்கின " தம்பி எழுப்பாதடா சுடுறானுகள்" என்னை உள்ளே இழுத்திப்போட்டவர் கூறியபடி என் தலையை கீழே அமத்திப்பிடித்துக்கொண்டார்.

திடீர் மாயன அமைதி என் தலைய மெல்ல விடுவித்தார் அந்த நபர் " சுடுறத நிப்பாட்டிட்டன் வேகமா வீட்ட போடா "

பதறியடித்து எழுந்த என் கண்கள் தமிழரசிநின்றபக்கமாய்தேடினஇரத்த வெள்ளத்தில் கிடந்தால் தமிழரசி அவள் பெயரைக்கூறிக் குளறியபடியே அவள் அருகில் ஓடினேன் அவள் உடலில் பிரிவதற்கு தயாரான நிலையிலிருந்த உயிரைப் பிடித்துவைத்துக்கொண்டிருந்தால் போலும் " தமிழரசி தமிழரசி கொஞ்சம் பொறு கண்ண மூடாத " என்றவாறே அவளைத்தூக்கி மடியில் போட்டேன் "சுதாகர் நான் உங்.. உங்..." அதற்கு மேல் அவள் நா வார்த்தைகளை உச்சரிக்க முடியாமல் தினறி என் மடியிலேயே மூச்சடங்கிப்போனால்.

**பு.தர்சிகன்**





# அறிவியல் மலர்




## மூளைத் திறனை தாக்குமா கொரோனா

கொவிட் தாக்குதலை வெற்றிகரமாக சமாளித்து மீண்டோரில் சிலருக்கு, சில பக்கவிளைவுகள் நீடிக்கவே செய்கின்றன. செவித் திறன் குறைவது, வாசனை அறியும் திறன் குறைவது, சிந்தனை மற்றும் நினைவாற்றல் குறைவது போன்ற பக்க விளைவுகளுக்கு சிகிச்சை தர வேண்டிய அவசியம் இருப்பதாக, மேலை நாடுகளில் மருத்துவர்கள் கருதுகின்றனர்.

சொல்லப்போனால், கோவிடுக்குப் பிந்தைய சிகிச்சை பிரிவுகளை, சில நாடுகள் துவங்கிஉள்ளன. குறிப்பாக, 'பிரெயின் போக்' எனப்படும் சிந்தனை மந்தத்தை போக்கும் சிகிச்சைகளை, தற்போது மருத்துவர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

கொரோனா வைரஸ் மூளையை நேரடியாகத் தாக்குவது அரிது என, மருத்துவர்கள் கருதுகின்றனர். ஆனால், மூச்சுத் திணறல், ஒக்சிஜன் போதாமை போன்றவை, மூளையை தற்காலிகமாக பதம் பார்க்கவே செய்வதாக மருத்துவர்கள் கண்டறிந்துள்ளனர். மன ஒருமைப்பாடு, நினைவாற்றல், முடிவெடுக்கும் திறன் போன்றவை, கொரோனா குணமாகியும் பல வாரங்களுக்கு மந்தமாகவே இருப்பதை மருத்துவர்கள் கண்டறிந்துள்ளனர். இவை மெல்ல மெல்ல விலகும் என்று விட்டுவிட முடியாது. எனவே, இந்த அறிகுறிகளுக்கும் தற்போது சிகிச்சைகளை கண்டறிய ஆய்வுகள் நடக்கின்றன.



## ஒக்ஸிஜன் சுவாசிக்காமலேயே உயிர் வாழும் விலங்கு! – விஞ்ஞானிகளின் அதிசய கண்டுபிடிப்பு!!

டெல் அவிவ் பல்கலைக்கழகத்தின் (Tel Aviv University - TAU) ஆராய்ச்சியாளர்கள் முதல் "ஒக்ஸிஜன் அல்லாத சுவாச விலங்கு"-ஐ கண்டுபிடித்தனர். செவ்வாயன்று வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில், ஆராய்ச்சியாளர்கள் ஏரோபிக் சுவாசம் விலங்குகளில் எங்கும் நிறைந்ததாக கருதப்படுவதாகக் கூறினர். ஆனால் "இது அப்படி இல்லை" என்பது இப்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த கண்டுபிடிப்பு தற்செயலாக நடைபெற்றது, இது இஸ்ரேலில் உள்ள டெல் அவிவ் பல்கலைக்கழகத்தின் விலங்கியல் நிபுணரான டோரதி ஹச்சோன் (Doro thee Huchon) தலைமையிலான குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்டது.

ஹச்சோனின் (Huchon) கூற்றுப்படி, ஹென்னெகுயா சால்மினிகோலா (Henneguya Salminicola) ஒரு ஒட்டுண்ணி ஆகும். இது சால்மன் தசையில் பத்துக்கும் குறைவான செல்கள் காணப்படுகிறது. ஒரு ஆய்வின் போது, ஒட்டுண்ணி உருவாகும் போது, "ஜெல்லிமீன்கள் மற்றும் பவளப்பாறைகளின் மைக்ஸோசோவான் உறவினரான விலங்கு, ஆற்றலை உற்பத்தி செய்வதற்காக ஒக்ஸிஜனை சுவாசிப்பதையும் உட்கொள்வதையும் கைவிட்டது. விலங்கு உலகத்தைப் பற்றிய அறிவியலின் பொதுவான அனுமானங்களை மீறுகிறது என்று குறிப்பில் இந்த கண்டுபிடிப்பின் முக்கியத்துவத்தை ஹச்சோன் மேலும் விளக்கினார். "பரிணாமம் விசித்திரமான திசைகளில் செல்லக்கூடும் என்பதை எங்கள் கண்டுபிடிப்பு காட்டுகிறது. ஏரோபிக் சுவாசம் ஒரு முக்கிய ஆற்றல் மூலமாகும், ஆனால் இந்த முக்கியமான பாதையை கைவிட்ட ஒரு விலங்கை நாங்கள் கண்டோம்," என்று அவர் கூறினார்.

பொதுவாக, bacteria மற்றும் புரோட்டோசோவான்கள் ஒக்ஸிஜன் இல்லாமல் உயிர்வாழும், ஏனெனில் அவை நொதித்தலில் இருந்து சக்தியைப் பெறுகின்றன அல்லது பாதரசம் அல்லது இரும்பு போன்ற பிற மூலக்கூறுகளைப் பயன்படுத்துகின்றன. ஹ°ச்சனின் கண்டுபிடிப்பு வரை, அனைத்து விலங்குகளும் ஒக்ஸிஜனை சுவாசிக்கின்றன, ஏனெனில் அவை பல்லுயிர் மற்றும் ஒக்சிஜனைப் பயன்படுத்தி ஆற்றலை உருவாக்குகின்றன. உயிரணுவின் சக்தியாக இருக்கும் மைட்டோகாண்ட்ரியாவில் ஒக்ஸிஜன் மேலும் கைப்பற்றப்பட்டது மற்றும் ஆற்றலை உருவாக்க பயன்படுகிறது. ஹென்னெகுயா சால்மினிகோலாவைப் பொறுத்தவரை, TAU-வின் ஆராய்ச்சியாளர்கள் மைட்டோகாண்ட்ரியா இல்லாததைக் கண்டுபிடித்தனர்.

"ஹென்னெகுயா மரபணுவைக் கூட்டும் போது, பேராசிரியர் ஹச்சோன் அதில் ஜவிலங்குஸ மைட்டோகாண்ட்ரியல் (mitochondrial) மரபணுவைக் கொண்டிருக்கவில்லை என்பதைக் கண்டறிந்தார்" என்று குறிப்பு படித்தது.

ஹென்னெகுயா சால்மினிகோலா எவ்வாறு ஆற்றலை உருவாக்குகிறது என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், விலங்கு அதைச் சுற்றியுள்ள மீன் உயிரணுக்களிலிருந்து வரைகிறார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர், அல்லது ஒக்ஸிஜன் இல்லாத சுவாசம் போன்ற வேறுபட்ட சுவாசத்தைக் கொண்டிருக்கலாம். குறிப்பின் இறுதிப் பிரிவில், TAU-வின் பேராசிரியர் இந்த கண்டுபிடிப்பு எதிர்கால பரிணாம ஆராய்ச்சிக்கு மகத்தான முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது என்றார்.

## மருத்துவ ஆராய்ச்சியை இடறும் பெருந்தொற்று

ஓராண்டைக் கடந்தும் ஓயாத பெருந்தொற்று. இதர மருத்துவ முன்னேற்றங்களுக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது. உதாரணமாக, புற்று நோய் ஆராய்ச்சியை எடுத்துக் கொள்ளுங்கள். உலக பொதுமுடக்கம், ஆய்வுக்கூடங்கள் மூடப்படுதல் அல்லது கொரோனாவுக்காக மடைமாற்றப்படுதல், ஆய்வு நிதிகள் குறைப்பு அல்லது நிறுத்தம் என்று புற்று நோய் ஆய்வுகள் நொண்டியடிக்கத் தொடங்கியுள்ளன.

லண்டனிலுள்ள புற்று நோய் ஆராய்ச்சி நிலைய வல்லுனர்கள் வெளியிட்டுள்ள கணிப்பு கவலை தருகிறது. அவர்களது மதிப்பீட்டின்படி, புற்று நோய் ஆராய்ச்சியின் வளர்ச்சி இரண்டு ஆண்டுகளுக்கு பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளன.

புதிய ஆராய்ச்சிகளை விடுங்கள். ஏற்கனவே, ஆய்வகத்திலிருந்து வெளியேறி களப் பரிசோதனைகள், மருந்து ஆய்வுகள் என்ற நிலைகளை எட்டிவிட்ட புற்று நோய் ஆராய்சிகள், கொரோனா 2வது அலையால் நிச்சயம் பின்னுக்குத் தள்ளப்படும்.

அது மட்டுமல்ல, மருத்துவமனைகளில் பல், கண் சிகிச்சைகள் முதல், முதியோர் பிணியியல் வரை பல சிகிச்சைகள் முழுவீச்சில் நடக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கொவிட் -19 தடுப்பூசிகள் பரவலாகப் போடப்பட்டு, 'திரள் நோய் எதிர்ப்பு' விரைவில் உண்டானால் தான், மருத்துவத்தின் இதர துறைகள் தடையின்றி முன்னேற வழி பிறக்கும்.



## சிந்தனையாளர் முத்துக்கள்

இந்தியாவில் சரியான டிஜிட்டல் தொழில்நுட்பத்தை கையாண்டு, 50 ஆயிரம் மையங்களை ஏற்படுத்தினால், தினமும், 50 லட்சம் முதல் ஒரு கோடி பேருக்கு கொவிட் - 19 தடுப்பூசிகளை போட முடியும்.

நந்தன் நிலேகனி,
இணை நிறுவனர், இன்போசிஸ்



இன்று நிரூபிக்கப்பட்ட உண்மை, முன்பு வெறும் கற்பனையாகவே துவங்கியது என்பதை மறந்து விடக்கூடாது.

வில்லியம் பிளேக்,
ஆங்கிலேய கவிஞர்





# விளையாட்டு செய்திகள்



## கிரிக்கெட் வீரர் அஸ்வின் குடும்பத்தில் 10 பேருக்கு கொரோனா!

இந்தியக் கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் அஸ்வினின் குடும்பத்தைச் சேர்ந்த 10 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக அவரது மனைவி பிரீத்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், 'எங்கள் குடும்பத்தில் பெரியவர்கள் 6 பேருக்கும், சிறியவர்கள் 4 பேருக்கும் கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. 5 முதல் 8 நாட்கள் மிகவும் மோசமாக இருந்தது. கொரோனா நோய் மிகவும் தனிமையில் இருக்கக்கூடிய ஒன்றாகும். அனைவரும் தடுப்பூசி எடுத்துக் கொள்வது சிறந்தது' எனக்குறிப்பிட்டுள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் மட்டும் தற்சமயம் விளையாடி வரும் அஸ்வின் தற் போது இடம்பெற்றுவரும் ஐ.பி.எல். போட்டிகளில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணி சார்பில் விளையாடி வந்தார். இந்நிலையில், சில தினங்களுக்கு முன்னர் அவர் ஐ.பி.எல். தொடரில் இருந்து விலகினார்.

கொரோனா வைரஸிற்கு எதிராக என்னுடைய குடும்பத்தார் போராடி வரும் நிலையில் அவர்களுக்காக உடன் இருப்பது அவசியம் என்பதால், ஐ.பி.எல். தொடரில் இருந்து விலகுவதாக அஸ்வின் குறிப்பிட்டுள்ளார்.



## மட்ரிட் பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து நோவக் ஜோகோவிச் விலகல்!

மட்ரிட் பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து, உலகின் முதல்நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச் விலகியுள்ளார்.

இதுதொடர்பாக 33 வயதான நோவக் ஜோகோவிச், தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது, 'இந்த ஆண்டு மட்ரிட்டுக்குச் சென்று எனது ரசிகர்கள் அனைவரையும் சந்திக்க முடியாமல் போனதற்கு மன்னிக்கவும்.



ஏற்கனவே இரண்டு வருடங்கள் ஆகி விட்டன. மிக நீண்ட காலமாகிவிட்டது. அடுத்த ஆண்டு உங்களைப் பார்ப்பேன் என்று நம்புகிறேன்' என பதிவிட்டுள்ளார்.

மூன்று முறை மட்ரிட் சம்பியனான ஜோகோவிச், தற்போது நடப்பு சம்பியனாக உள்ளார். அவர் 2019ஆம் ஆண்டு சம்பியன் பட்டத்தை வென்றிருந்தார். மட்ரிட் பகிரங்க டென்னிஸ் தொடர், 2020ஆம் ஆண்டு கொரோனா வைரஸ் தொற்றினால் இரத்துசெய்யப்பட்டது. ஆண்டின் இரண்டாவது கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ் தொடருக்கு முன்னோட்டத் தொடராக செம்மண் தரையில் நடைபெறும் 'ஏடிபி மாஸ்டர்ஸ் 1000' தொடரான மட்ரிட் பகிரங்க டென்னிஸ் தொடர், நாளை முதல் மே மாதம் 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

## ஐ.பி.எல். 2021 – பெங்களூரை இலகுவாக வீழ்த்தியது பஞ்சாப்

ஐ.பி.எல். தொடரின் 26 ஆவது லீக் போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணி 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியை வெற்றி கொண்டது.

அகமதாபாத்தில் அன்று இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது.



அதன்படி களமிறங்கிய பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 179 ஓட்டங்கள் எடுத்தது.

அவ்வணி சார்பில் கெய்ல் 46 ஓட்டங்களையும், ராகுல் ஆட்டமிழக்காது 91 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பெங்களூர் சார்பில் ஜேமிசன் 2, சாம்ஸ், சாஹல், அகமது தலா ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதையடுத்து, 180 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பெங்களூர் அணி, குறிப்பிட்ட இடைவெளியில் அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்து 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 145 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது.

பெங்களூர் சார்பில் விராட் கோலி 35 ஓட்டங்களையும், ரஜத் பட்டிதார் 31 ஓட்டங்களையும், ஹர்ஷல் படேல் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதன் மூலம் பஞ்சாப் அணி 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இது பஞ்சாப் அணி பெற்ற 3வது வெற்றி, பெங்களூர் அணி பெற்ற இரண்டாவது தோல்வியாகும்.

### பவேரியன் சர்வதேச டென்னிஸ் சம்பியன்ஷிப்: ஸ்வெரவ் காலிறுதிக்கு முன்னேற்றம்!

ஜேர்மனியில் நடைபெற்றுவரும் ஆண்களுக்கே உரித்தான பவேரியன் சர்வதேச டென்னிஸ் சம்பியன்ஷிப் தொடரின், ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றுப் போட்டியில், ஜேர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரவ் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில், ஜேர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரவ், லித்துவேனியாவின் ரியார்டாஸ் பெரான்கிஸ்சை எதிர்கொண்டார்.



விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில், முதல் செட்டை அலெக்ஸாண்டர் ஸ்வெரவ் 6-2 என்ற செட் கணக்கில் எளிதாக கைப்பற்றினார்.

இதனைத்தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டில், ஸ்வெரவ்வுக்கு பெரான்கிஸ் பதிலடி கொடுப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இந்த எதிர்பார்ப்புக்களை தவிடுபொடியாக்கிய ஸ்வெரவ், இரண்டாவது செட்டையும் 6-4 என்ற கணக்கில் கைப்பற்றி காலிறுதி க்கு முன்னேறினார். நடைபெறும் காலிறுதிப் போட்டியில், அலெக்ஸாண்டர் ஸ்வெரவ், பெலராஸின் இலியா இவாஷ்காவுடன் மோதவுள்ளார்.



# உலக பார்வை



## இஸ்ரேலில் மதநிகழ்வொன்றின் போது தள்ளுமுள்ளில் சிக்கி 45 பேர் உயிரிழப்பு

இஸ்ரேலில் மதநிகழ்வொன்றில் சனநெரிசல் காரணமாக ஏற்பட்ட தள்ளுமுள்ளில் சிக்கி 50க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். இஸ்ரேலின் வட கிழக்கு பகுதியில் வருடந்தோறும் இடம்பெறும் Lag B'Omer மதநிகழ்விலேயே இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கானவர்கள் கலந்துகொண்ட இந்த மதநிகழ்வில் ஒரு சில நொடிகளில் இந்த விபத்து ஏற்பட்டது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.படிகளில் ஏறிக் கொண்டிருந்த தடுமாறி கீழே விழத் தொடங்கியவுடன் இந்த விபத்து இடம்பெறத்தொடங்கியது பின்னால் நின்றவர்கள் ஒருவர் பின் ஒருவராக விழுந்தனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




ஒரு சில நிமிடங்களில் இதுஇடம்பெற்றது. மக்கள் விழுந்தனர் ஒருவரை ஒருவர் மிதித்தனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் இடம்பெற்ற பின்னர் குறுகிய பாதை வழியாக மக்கள் தப்பிவெளியே முயல்வதை காண்பிக்கும் படங்கள் வெளியாகியுள்ளன. மக்களை உடனடியாக வெளியேறுமாறு அறிவித்தல்கள் வெளியானவேளை நான் குண்டுவெடிப்பு எச்சரிக்கை என நினைத்தேன் என ஒருவர் தெரிவித்துள்ளார். அதன் பின்னர் பொலிஸார் பாதுகாப்பாக வெளியேறுவதற்கான பாதை குறித்து அறிவித்தனர் என அவர் தெரிவித்துள்ளார். இது இங்கு இடம்பெறும் என எவரும் எதிர்பார்க்கவில்லை கொண்டாட்டம் துக்க நிகழ்வாக மாறிவிட்டது என அவர் தெரிவித்துள்ளார். 103 பேர் காயமமடைந்துள்ளனர் இவர்களில் 38 நிலைமை ஆபத்தானதாக காணப்படுகின்றது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## இந்தியாவுக்கு 20 ஒக்ஸிஜன் ஆலைகள் உள்ளிட்ட பல பாரிய உதவிகளை அறிவித்த அமெரிக்க நிறுவனம்!

கொரோனா வைரஸின் இரண்டாவது அலையில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள இந்தியாவுக்கு பாரிய உதவிகளை அளிக்க வால்மார்ட் நிறுவனம் முன்வந்துள்ளது. இந்தியாவுக்கு கிட்டத்தட்ட 40 நாடுகளிடமிருந்து மருத்துவ உதவிகள் மற்றும் சுகாதார ஆதரவுகள் அளிக்கப்பட்டுவரும் நிலையில், அமெரிக்க பன்னாட்டு சில்லறை நிறுவனமான வால்மார்ட் பல பாரிய உதவிகளை அனுப்பவுள்ளதாக உறுதியளித்துள்ளது. வால்மார்ட் நிறுவனம் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், 20 ஒக்ஸிஜன் உற்பத்தி செய்யும் ஆலைகள் மற்றும் 20 கிரையோஜெனிக் கொள்கலன்களை ஒக்ஸிஜன் சேமிப்பு மற்றும் போக்குவரத்துக்காக நன்கொடையாக வழங்குவதாக அறிவித்துள்ளது.

அத்துடன் 3,000-க்கும் மேற்பட்ட ஒக்ஸிஜன் செறிவூட்டிகள் மற்றும் 500 ஒக்ஸிஜன் சிலிண்டர்கள் வீட்டிலோ அல்லது மருத்துவமனையிலோ நோயாளிகளுக்கு ஒக்ஸிஜன் சிகிச்சையை வழங்குவதற்காக நன்கொடை அளிக்கும்" என்று அமெரிக்க மாகாணம் ஆர்கன்சாஸை தலைமையிடமாகக் கொண்ட அந்த நிறுவனம் கூறியுள்ளது. மேலும், கொரோனா வைரஸின் எழுச்சியை எதிர்த்துப் போராட உதவும் அரசு சாரா நிறுவனங்களுக்கு 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதாகவும் வால்மார்ட் நிறுவனம் அறிவித்துள்ளது. சனிக்கிழமை வரை, இந்தியாவில் கொரோனா வைரஸ் வழக்குகள் கடந்த 24 மணி நேரத்தில் 4 லட்சத்துக்கும் மேற்பட்ட புதிய நோய்த்தொற்றுகள் பதிவாகியுள்ளன. அதே நேரத்தில் சிகிச்சை பெற்று வருபவர்களின் எண்ணிக்கை 32 லட்சத்தை தாண்டியுள்ளன என்று இந்திய சுகாதார அமைச்சகம் அறிவித்துள்ளது.




## புதுடில்லியில் தாயாரை காப்பாற்றுவதற்காக ஒக்சிசன்சிலிண்டரை நிரப்பி தருமாறு காலில்விழுந்து மன்றாடிய பெண்

கொரோனா வைரசினால் பாதிக்கப்பட்டுள்ள தனது தாயாருக்கு ஒக்சிசன் சிலிண்டரை வழங்குமாறு புதுடில்லியில் பெண்ணொருவர் பலரின் கால்களில் விழுந்து மன்றாடியதை காண்பிக்கும் படம் சமூகவலைத்தளங்களில் பரவி வருகின்றது.

ஸ்ருதி சகா என்ற பெண்ணொருவரே இவ்வாறு புதுடில்லியில் ஒக்சிசன் நிரப்பும் நிலையத்தின் முன்னால் நின்றவாறு ஒக்சிசன் சிலிண்டருக்காக மன்றாடியுள்ளார். புதுடில்லியில் ஒக்சிசன் நிரப்பும் நிலையமொன்றின் முன்னால் நின்று கொண்டிருந்த அவர் பதட்டமடைந்த ஒக்சிசன் நிரப்பும் நிலையத்தை திறக்குமாறு மன்றாடியுள்ளார். காலில் விழுந்து அவர் மன்றாடிய வேளை பொலிஸாரும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் அவரை பொறுமையாகயிருக்கும் படி கேட்டுள்ளனர். சாகா ஒக்சிசனை நிரப்புவதற்கான வரிசையில் நின்று கொண்டிருந்த வேளை அவரது தாயார் மருத்துவமனையில் உயிரிழந்துவிட்டார் என்ற செய்தி கிடைத்துள்ளது. அதனை அறிந்ததும் அவர் கதறியழுதுள்ளார். அருகிலிருந்தவர்கள் அவரை தேற்ற முயன்றுள்ளனர். நிரப்பப்படாத சிலிண்டரை விட்டு அவர் சென்றுள்ளார். அதிகாலை இரண்டுமணியிலிருந்து நாங்கள் வீதிகளில் நிற்கின்றோம்.எங்கும் ஒக்சிசன் இல்லை இறுதியாக இங்கு வந்தேன் அவர்களும் எங்கள் கதறலை செவிமடுக்கவில்லை நான் எனது அம்மா ஆபத்தான நிலையிலுள்ளார் என தெரிவித்துக்கொண்டிருந்தேன் என சாகா தெரிவித்துள்ளார்.





## ஜப்பானில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

ஜப்பானின் வடகிழக்கு பகுதியில் அன்று காலை ஏற்பட்ட நிலநடுக்கத்தால், தலைநகர் டோக்கியோவில் கட்டடங்கள் சில குலுங்கியதாக தெரிவிக்கப்படுகிறது. மண் சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்ட போதும், சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை.

இது ரிக்டரில் 6.6 ஆக பதிவாகி உள்ளது என தேசிய நிலநடுக்கவியல் மையம் தெரிவித்து உள்ளது. இதனால் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றிய விவரங்கள் எதுவும் உடனடியாக வெளிவரவில்லை.

## துப்பாக்கி கலாச்சாரத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை – ஜோ பைடன் உறுதி!

துப்பாக்கி வன்முறையில் இருந்து அமெரிக்கர்களை பாதுகாப்பதற்கு தன்னால் இயன்ற அனைத்தையும் செய்வேன் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் புதிய அரசாங்கம் பொறுபேற்று 100 நாட்கள் கடந்துள்ள நிலையில், இது குறித்து நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பைடன் மேற்படி குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், ' அமெரிக்க மீண்டும் முன்னேற்றத்தை நோக்கி செல்கிறது.

நான் பதவி ஏற்று 100 நாட்களில் 100 மில்லியன் கொரோனா தடுப்பூசி போடப்படும் என உறுதி அளித்தேன். தற்போது 100 நாட்களில் 220 மில்லியன் மக்களுக்கு தடுப்பூசி செலுத்தியுள்ளோம்.

ஐரோப்பாவில் நேட்டோ படைகளை வைத்திருப்பதை போல இந்திய - பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்கா வலுவான இராணுவத்தை நிறுத்தும். அது மோதலுக்காக அல்ல. மோதலை தவிர்ப்பதற்காக மட்டுமே என்பதை சீன ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளேன்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

# திருடப்பட்ட உலகின் மிகப் பெரிய முயல்

**1.32 மீட்டர் நீளமான உலகின் மிகப் பெரிய முயல் ஒன்று திருடப்பட்டுள்ளது. முயலைத் திரும்பி பெறும் வகையில், சுமார் 90ஆயிரம் ரூபாய் பரிசு வழங்குவதாக அதன் உரிமையாளர் சமூக ஊடகத்தில் அறிவித்தார்.**







# சேதமடைந்த நோட்ரே டேம் டி பாரிஸ் உச்சி பகுதிக்கான மாதிரி வெளியீடு

**தீ விபத்தில் சேதமடைந்த நோட்ரே டேம் டி பாரிஸ் தேவாலயத்தின் உச்சி பகுதிக்கான மாதிரி 15ஆம் நாள் வெளியானது. இந்த மாதிரியானது மரத் துண்டுகளால் உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.**







# புல் வெளியில் பயணிகள் விளையாட்டு

**சீனாவின் நான்ஜின் நகரிலுள்ள ஏரிக்கரையை ஒட்டி அமைந்துள்ள புல் வெளியானது காற்றில் தலையசைத்து அலை அலையாகத் திரிந்து பறந்துள்ளது. இந்த சிறப்பான காட்சி நிறைய பயணிகளின் வருகையை ஈர்த்துள்ளது.**





இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 2021.05.02 அன்று வெளியிடப்பட்டது.